Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, OCTOBER 18, 2023

புதன்கிழமை ஒக்டோபர் 18, 2023 | ஒளி: 09 கதிர்: 108 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE

## எம்.பியான அலி சாஹிர்; எதிரணியில் அமர்ந்தார்



முன்னாள் சுற்றாடல் அமைச்சர் நசீர் அஹமட்டின் வெற்றிடத்திற்கு நியமிக்கப்பட்ட அலி சாஹிர் மௌலானா சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன முன்னிலையில் செவ்வாய்க்கிழமை (17) காலை சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

அவர் சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட பின்னர் ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களின் வாழ்த்துக்களுக்கு மத்தியில் எதிரணியின் பின் வரிசையில் அமர்ந்தார்.

நீதிமன்ற உத்தரவின்படி, நசீர் அஹமட்டின் பாராளுமன்ற உறுப்பினர் பதவி அண்மையில் நீக்கப்பட்டது. இதன்படி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மட்டக்களப்பு மாவட்டப் பட்டியலில் அடுத்த வேட்பாளராகக் களமிறங்கிய அலி சாஹிர் மௌலானாவை நியமிக்கத் தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்தது. வர்த்தமானி அறிவிப்பும் வெளியிடப்பட்டது.



## "20 ஹர்த்தாலுக்கு ஆதரவு தாருங்கள்"

வா.கிருஷ்ணா, கனகராசா சரவணன்

வெள்ளிக்கிழமை (20) வடக்கு கிழக்கில் முன்னெடுக்கவிருக்கும் ஹர்த்தாலுக்கு கிழக்கு மாகாண தமிழ் பேசும் மக்கள் முழுமையான ஆதரவினை வழங்கவேண்டும் என தமிழ் தேசிய கூட்டமைப்பு அழைப்பு விடுத்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக அனைத்து கட்சிகளும் இணைந்து மட்டு. ஊடக அமையத்தில், செவ்வாய்க்கிழமை (17) ஊடகவியலாளர் சந்திப்பை நடத்தியது. அதில் கருத்துரைத்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன், இதற்கான அழைப்பை விடுத்துள்ளார்.

தொடர்ச்சி P2

## "புத்தர் சிலைகளை வைத்தால் தமிழீழக் கனவு எப்படி கலையும்"



மேய்ச்சல் தரைகளில் அத்துமீறி குடியிருப்போரை நீதிமன்ற அனுமதியை பெற்று உடனடியாக வெளியேற்றுமாறு பொலிஸாருக்கும் மகாவலி அதிகார சபைக்கும் உத்தரவிட்ட நிலையில், கிழக்குமாகாண முன்னாள் ஆளுநர் அனுராதா ஜகம்பத்தும் அம்பிட்டிய தேரரும் புத்தர் சிலை ஒன்றை அங்கு சிங்களவர்களின் உதவியுடன் வைத்து அங்குரார்ப்பண நிகழ்வை செய்துள்ளார்கள்.

தொடர்ச்சி P2

## "வைரஸ் பரவும் அபாயம்"

வைத்தியர்கள் எச்சரிக்கை

சமீபத்திய வானிலை ஏற்ற இறக்கங்களினால், வைரஸ் தொற்று பரவக்கூடிய சாத்தியம் குறித்து மருத்துவ அதிகாரிகள் பொதுமக்களை எச்சரித்து வருகின்றனர்.

வெப்பநிலையில் ஏற்படும் ஏற்ற இறக்கம் மற்றும் காலநிலையில் ஏற்படும் மாற்றமே இதற்குக் காரணமாக இருக்கலாம் என்று சிரேஷ்ட ஆலோசகர் வைத்தியர் டாக்டர் ஆனந்த விஜேவிக்ரம கூறினார்.



தொடர்ச்சி P2



முள்ளிவாய்க்கால் தூபியை

# உடைத்து அகற்றவும்

## மூவர் முறைப்பாடு: வியாழன் விசாரணை

எம்.றொசாந்த்

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள முள்ளிவாய்க்கால் நினைவு தூபி உரிய அனுமதிகள் பெறப்படாமல் நிர்மாணிக்கப்பட்டுள்ளதாக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

முறைப்பாடுகளை பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவர், யாழ்ப்பாணம் கட்டுடை மற்றும் கிளிநொச்சி விசுவமடு ஆகிய பிரதேசங்களை சேர்ந்த இரு பொதுமகன்கள் ஆகியோர் இந்த முறைப்பாட்டை வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை ஆரம்பித்துள்ள இலஞ்ச ஊழல் ஆணைக்குழு, தூபியை அமைக்கப் பெறப்பட்ட, செலவழிக்கப்பட்ட நிதி விபரங்கள், தூபிக்கான அனுமதிகள் தொடர்பிலான ஆவணங்களுடன் வியாழக்கிழமை (19) விசாரணைக்கு சமூகமளிக்குமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது.

தொடர்ச்சி P2

## ஒரே சூலில் 6 செல்வங்கள்

பொரளை காசல் வைத்தியசாலையில், தாயொருவர் ஆறு சிசுக்களை ஞாயிற்றுக்கிழமை (15) பிரசவித்துள்ளார். பிரசவித்த ஆறு சிசுக்களும் ஆண் குழந்தைகள் என்பது சிறப்பம்சமாகும்.

ஆறு குழந்தைகளில் ஐந்து குழந்தைகள் காசல் மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருவதாகவும், ஒரு குழந்தை கொழும்பு குழந்தை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் கூறப்படுகின்றது.

ராகம பிரதேசத்தைச் சேர்ந்த தாய் ஒருவரே இந்தக் குழந்தைகளைப் பெற்றெடுத்ததாகவும், ஆறு குழந்தைகளும் ஆரோக்கியமாக இருப்பதாகவும் 400



கிராம் முதல் 700 கிராம் வரையிலும் நிறைகளை கொண்டிருக்கின்றன எனவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## "தொன்மையான ஆலயங்கள், மடாலயங்களை விடுவிக்கவும்"

எம். றொசாந்த்


யாழ்ப்பாணம் -கீரிமலை ஜனாதிபதி மாளிகையை சூழவுள்ள ஆலயங்கள், மடாலயங்கள் என்பன விடுவிக்கப்பட வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதிசெயலாளர் உமாசந்திர பிரகாஷ் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் செவ்வாய்க்கிழமை (17) இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 33 வருடங்களுக்கு மேலாக உயர்பாதுகாப்பு வலயமாக காணப்படும் பிரதேசத்திற்குள் அமைக்கப்பட்டுள்ள ஜனாதிபதி மாளிகை, தற்போது தனியார் நிறுவனம் ஒன்றிற்கு 50 வருட கால பகுதி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



## சிசு கொலை தாய்க்கு சிறை

யது பாஸ்கரன்

முல்லைத்தீவு- புதுக்குடியிருப்பு பகுதியில் பிறந்து ஒருயொரு நாளான சிசுவைப் படுகொலை செய்த சிசுவின் தாய்க்கு, ஐந்து வருடகால கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், பத்தாயிரம் ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது. முல்லைத்தீவு- புதுக்குடியிருப்பு, மல்லிகைத்தீவு பகுதியில் கடந்த 2017ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 03ஆம் திகதியன்று பிறந்து ஒரு நாளான குழந்தை ஒன்றினை கொலை செய்த குற்றச்சாட்டில் அச்சிசுவின் தாய், புதுக்குடியிருப்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

தொடர்ச்சி P2

## ஜோடியாய் மாய்ந்த இரு சிறுமிகள்

மு.தமிழ்ச்செல்வன்

கிளிநொச்சி - பெரியபரந்தனில் இரு சிறுமிகள் கடிதம் எழுதி வைத்து விட்டு, தங்கள் உயிர்களை மாய்த்துக்கொண்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

"எங்களது சாவுக்கு யாரும் காரணமல்ல, இது நாங்கள் எடுத்த முடிவு, எங்களுக்கு வாழவே பிடிக்கவில்லை" என கடிதம் ஒன்றை எழுதி வைத்துவிட்டு இரண்டு சிறுமிகளும் கையொப்பமிட்டதன் பின்னர் தங்கள் உயிர்களை மாய்த்துக்கொண்டுள்ளனர்.

திங்கட்கிழமை (16) பிற்பகல் இரண்டு மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சுரேஸ்குமார் தனிகை மற்றும் லோகேஸ்வரன் தமிழினி என்ற 17 வயதுடைய சிறுமிகளே தமிழினியின் வீட்டுச் சமையலறையில் தங்கள் உயிர்களை மாய்த்துக்கொண்டுள்ளனர்.

தொடர்ச்சி P2

## "4/21 விசாரணைகள் அநீதியானவை"



உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக இதுவரையில் நடத்தப்பட்ட அனைத்து விசாரணைகளும் அநீதியான முறையிலும், தவறான முறையிலுமே நடைபெற்றுள்ளன என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (17) சனல் 4 வீடியோ தொடர்பான தெரிவுக்குழு நியமனம் குறித்த சர்ச்சையின் போது, தனது கருத்தை முன்வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2

## "விசாரணைகளுக்கு இடையூறு ஏற்படுத்தாது"

ஈஸ்டர் தாக்குதல் சம்பவம் தொடர்பில் பாராளுமன்ற தெரிவுக்குழுவொன்றை நியமித்தமை அதன் விசாரணைகளுக்கு இடையூறு ஏற்படுத்தாது என ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளர் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

ஈஸ்டர் தாக்குதலுக்கு காரணமானவர்களுக்கு கடுமையான தண்டனை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதே பாராளுமன்ற தெரிவுக்குழுவை நியமிப்பதன் நோக்கம் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

பாராளுமன்றத் தெரிவுக்குழு நியமனம் தொடர்பில் எதிர்க்கட்சிகள் முன்வைத்துள்ள குற்றச்சாட்டுகளுக்கு பதில் வழங்கும் போதே, இதனைத் குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2

## "4/21 விசாரணையில் நம்பிக்கையே இல்லை"



உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதிக்கான தேசிய கத்தோலிக்க திருச்சபை ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணை 99 சதவீதம் நிறைவடைந்துள்ளது என்ற கதையை மறுத்துள்ளது என்பதால், பாராளுமன்ற குழுவின் நம்பகத்தன்மையில் தேசிய கத்தோலிக்க திருச்சபைக்கு நம்பிக்கை இல்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு நியமிக்கப்படவுள்ள விசேட பாராளுமன்ற தெரிவுக்குழு தொடர்பில் பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (17) உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும், பாராளுமன்ற தெரிவுக்குழு முறையான தெரிவுக்குழுவாக அமைய வேண்டுமானால், இதன் தலைவரை பெயரிட்டு இதன் பொறுப்பை எதிர்க்கட்சிக்கு வழங்குமாறும், 9/11 ஆணைக்குழு போல, ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகள் உள்ளடங்களாக இதன் அங்கத்தவர் கட்டமைப்பு சமமாக அமைய வேண்டும். இவ்வாறு அமையாது விடத்து இதில் எதிர்க்கட்சி பங்கேற்காது என்றார்.

# கம்பளை வெடிப்பில் மூவர் பாதிப்பு

## பந்தென உதைத்ததில் பாதணி பறந்தது

நவி

கம்பளை கல்வி வலயத்துக்கு உட்பட்ட மாவத்துர கலைமகள் தமிழ் வித்தியாலய பாடசாலை மைதானத்தில் ஏற்பட்ட வெடிப்புச் சம்பவத்தில் காயமடைந்த மாணவர்கள் மூவர் கம்பளை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் இருவர் சிகிச்சை பெற்று வீட்டுக்குத் திரும்பியுள்ள நிலையில், தரம் 6 இல் பயிலும் 11 வயதான மாணவன் சிகிச்சை பெற்று வருகிறார்.

பாடசாலை நேரத்தில், மேற்படி மூன்று மாணவர்களும் வெளியே வந்துள்ளார்.

அப்போது பந்து போன்ற ஒன்று கிடந்துள்ளது.

அதனை ஒருவர் காலால் உதைத்த போது அது திடீரென வெடித்துள்ளது.

உதைத்த மாணவனின் பாதணி சேதமடைந்துள்ளது. அந்தக் காலில் கடுமையான காயம் ஏற்பட்டுள்ளது.

விலங்குகளை வேட்டையாட பயன்படுத்து வெடி பொருள் ஒன்றே வெடித்து சிதறியதாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட மாணவனின் தந்தை கூறுகிறார்.

இச்சம்பவம் இடம்பெற்று 01:35 மணியளவில் பாடசாலையினால் தனக்கு வழங்கப்பட்ட தொலைபேசி அழைப்பின் பிரகாரம், குறித்த இடத்திற்கு சென்ற போது பாடசாலையில் கரும் புகை சூழ்ந்திருந்ததாக அவர் தெரிவித்தார்.

இது குறித்து பாடசாலை அதிபர் கணேசன் புவனேஸ்வரியிடம் கேட்டபோது, வெடி விபத்து குறித்து யாரிடமும் கூற வேண்டாம் என பொலிஸார் கூறியதாக கூறினார்.

தொடர்ச்சி P2

## "20 ஹர்த்தாலுக்கு ஆதரவு தாருங்கள்"

நீதிபதி சரவணராஜா மீது விடுக்கப்பட்டுள்ள அச்சுறுத்தலானது இந்த நாட்டில் நீதிபதிக்கே பாதுகாப்பு இல்லையென்பதை காட்டுகின்றது. இந்த நாட்டில் இருக்கமுடியாது என்று நீதிபதி ஒருவரே வெளியேறிச்செல்கின்றார்.

இந்நிலையில், அந்த அச்சுறுத்தலை கண்டிக்கும் வகையிலும் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தும் வடக்கு கிழக்கில் உள்ள தமிழ் பேசும் சமூகம் அனைத்தும் இணைந்து 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஹர்த்தாலை முன்னெடுக்கவுள்ளது.

## "புத்தர் சிலைகளை வைத்தால் தமிழீழக்கனவு எப்படி கலையும்"

இவ்வாறாக நீங்கள் நடந்து கொள்ளும்போது தமிழீழக்கனவு எப்படி தமிழ் மக்கள் மத்தியிலிருந்து இல்லாமல் செல்லும் என தமிழ் தேசியக்கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட எம்.பி.யான கோவிந்தன் கருணாகரம் கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (17) இடம்பெற்ற கோப் குழுவின் 100 ஆவது ஆண்டுநிறைவு சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே இவ்வாறு கேள்வி எழுப்பிய அவர் மேலும் பேசுகையில்,

தமிழீழ விடுதலைப் புலிகள் நாங்கள் அழித்துவிட்டோம். ஆனால் தமிழ் மக்கள் மத்தியில் இருந்து தமிழீழக்கனவு இன்னும் மறையாமல் இருக்கின்றதென முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர ஜனாதிபதி ஊடக மையத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கூறியிருந்தார்.

நான் ஒரு விடுதலைப்போராளி என்ற வகையில் ஓர் உண்மையைக்கூறுகின்றேன். எமது மக்களின் மன நிலையைக் கூறுகின்றேன். உண்மையில் தமிழீழக்கனவு, தனிநாட்டுக்கனவு என்பது இன்னும் எமது மக்கள் மத்தியிலிருந்து இல்லாமல் செல்வதற்கு அல்லது அழிவதற்கு நீங்கள் விரும்பவில்லை என்பதே உண்மை.

யாழ்ப்பாணத்திலிருந்து அம்பாறை வரை, தையிட்டி விகாரையாக இருக்கலாம், குருந்தூர் மலை விகாரையாக இருக்கலாம், வெட்டுக்குநாறி மலையாக இருக்கலாம், திருகோணமலையில் அமைக்கப்படும் விகாரைகளாக இருக்கலாம், அம்பாறையில் கபளீகரம் செய்யப்படும் தமிழர் நிலங்களாக இருக்கலாம். இவை எல்லாம் தமிழீழக்க னவை, தனிநாட்டுக்கனவை எமது மக்கள் மத்தியிலிருந்து இல்லாமல் செல்வதற்கு அல்லது அழிவதற்கு நீங்கள் விரும்பவில்லை என்பதையே வெளிக்காட்டி நிற்கின்றன.

## "வைரஸ் பரவும் அபாயம்"

பருவகால காய்ச்சல் இல்லையென்றாலும், வைரஸ் தொற்றுகள் பொதுவானவை, ஆனால் மருத்துவ கவனிப்பை புறக்கணிப்பது ஆபத்தான விளைவுகளுக்கு வழிவகுக்கும் என்று டாக்டர் விஜேவிக்ரம எச்சரித்தார்.

எனவே, "தொண்டை புண், இருமல், மூக்கு ஒழுகுதல், காய்ச்சல் மற்றும் வலியுடன் கூடிய காய்ச்சல் போன்ற தொடர்ச்சியான அறிகுறிகளை தனிநபர்கள் அனுபவித்தால் உடனடியாக மருத்துவ உதவியை நாடுவது அவசியம்," என்று அவர் வலியுறுத்தினார்.

மருத்துவ நிபுணர்களின் வழிகாட்டுதல் இன்றி நுண்ணுயிர் எதிர்ப்பிகளை உட்கொள்ள வேண்டாம் என்றும் டாக்டர் விஜேவிக்ரம மக்களை வலியுறுத்தினார்.

இதற்கிடையில், லேடி ரிட்ஜ்வே மருத்துவமனையின் (LRH) ஆலோசகர் குழந்தை நல மருத்துவர் டாக்டர் தீபால் கூறுகையில், தற்போது பரவி வரும் வைரஸ் தொற்று "மேல் சுவாச வைரஸ் தொற்று" என்று குறிப்பிடப்படுகிறது.

தொண்டைப்புண் மற்றும் காய்ச்சலுக்கு சிகிச்சை பெறும் குழந்தைகளின் எண்ணிக்கை சற்று அதிகரித்துள்ள போதிலும், வைரஸ் தொற்று அபாயகரமான அளவில் பரவவில்லை என டாக்டர் பெரேரா வலியுறுத்தினார்.

ஆயினும்கூட, நிலைமையை திறம்பட நிர்வகிப்பதற்கு சரியான நேரத்தில் மருத்துவ சிகிச்சை முக்கியமானது என்று அவர் குறிப்பிட்டார்.

## "விசாரணைகளுக்கு இடையூறு ஏற்படுத்தாது"

பாராளுமன்ற தெரிவுக்குழு நியமனத்தின் ஊடாக பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட உண்மைகள் மற்றும் ஆவணங்களை முன்வைக்க முடியும் என நினைக்கின்றேன். ஏனெனில் அந்த விவாதத்தில் சில எம்.பி.க்கள் புதிய விஷயங்களை முன்வைத்த காலங்கள் உண்டு, நமக்குத் தெரியாத விஷயங்கள், ஒருவேளை அவர்களின் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளக் கூடும். ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் எமது அனைவரினதும் நிலைப்பாடு இதனை செய்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதேயாகும். அந்தச் சோதனைகளுக்கு இது ஒரு தடையாக இருக்கும் என நான் நினைக்கவில்லை என்றார்.

## தவறுக்கு வருந்துகின்றோம்

திங்கட்கிழமை (17) வெளியான தமிழ்மிரர் மின்னிதழில், "சனல்4 குற்றச்சாட்டை விசாரிக்கும் விசேட குழுவில் சிறுபான்மையினர் புறக்கணிப்பு" என்பது தவறானது. அந்த குழுவை நியமிப்பதற்கான யோனையில் சிறுபான்மையினர் எவரும் கையொப்பமிடவில்லை என்பதே சரியானது. தவறுக்கு வருந்துகின்றோம் (ஆர்)



# உடைத்து அகற்றவும்

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் காணப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவு தூபி கடந்த 2020 ஜனவரி 08ஆம் திகதி இரவு இடித்து அழிக்கப்பட்டது.

அதனை அடுத்து, பல்கலைக்கழக மாணவர்கள் உள்ளிட்டவர்கள் போராட்டங்களில் ஈடுபட்டதை அடுத்து துணைவேந்தர் சிறிசற்குணராஜாவினால் மீண்டும் 10ஆம் திகதி அடிக்கல் நாட்டப்பட்டு புதிய தூபி நிர்மாணிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து வருடந்தோறும், "மே 18 " முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்கள் குறித்த தூபியிலையே இடம்பெற்று வருகின்றது.

இந்நிலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட புதிய தூபிக்கு உரிய அனுமதிகள் பெறப்படவில்லை என்றும், அவ்வாறு அனுமதி பெறப்படாத தூபியை உடைச்சு அகற்றுமாறும் கோரியே முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது.

## "தொன்மையான ஆலயங்கள், மடாலயங்களை விடுவிக்கவும்"

அப்பகுதியில் வாழ்ந்த மக்கள் 33 வருடங்களுக்கு மேலாக இடம்பெயர்ந்து தற்காலிக இடங்களில் வசித்து வரும் நிலையில், தம்மை மீள்குடியேற்றுமாறு கோரி போராட்டங்களையும் பல்வேறு தரப்பிடமும் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

அவர்களை மீள் குடியேற்றாமல் அவர்களின் காணிகளை சட்டவிரோதமாக சுவீகரித்து தனியார் நிறுவனத்திற்கு குத்தகைக்கு விடுத்துள்ளனர்.

முதலீட்டாளர்கள் வடமாகாணத்தை நோக்கி வருவதனை வரவேற்கிறோம். அவர்கள் சட்ட ரீதியாக எமது மக்களை பாதிக்காத வகையில் அவர்களின் முதலீடுகள் அமைய வேண்டும்.

ஜனாதிபதி மாளிகை அமைந்துள்ள சுமார் 12 ஏக்கர் காணியை எடுத்துக்கொண்டு, அதற்குள் இருக்கும் தனியார் காணிகளுக்கான இழப்பீடுகளை தற்போதைய சந்தை பெறுமதியின் அடிப்படையில் வழங்க வேண்டும். அதேவேளை ஜனாதிபதி மாளிகையை சூழவுள்ள சுமார் 18 ஏக்கர் காணியையும் உடனடியாக காணி உரிமையாளர்களுக்கு கையளிக்க வேண்டும்.

அத்துடன், ஜனாதிபதி மாளிகையை சூழவுள்ள பகுதிகளில் தொன்மையான ஆலயங்களான ஆதி சிவன் ஆலயம், விஷ்ணு ஆலயம், சடையம்மா மடம் உள்ளிட்ட மடாலயங்கள் என்பவை விடுவிக்கப்பட வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார்.

## கம்பளை வெடிப்பில் மூவர் பாதிப்பு

இது தொடர்பாக கம்பளை வலயக் கல்விப் பணிப்பாளர் நிஹால் அழககோனிடம் வினவ முயன்றபோதும் முயற்சி பயனளிக்கவில்லை. இந்நிலையில், இந்த சம்பவம் தொடர்பிலான

மேலதிக விசாரணைகளை கம்பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்,

## யுத்தத்தால் இலங்கைக்கு

கடுமையான பாதிப்பு

மத்தியக் கிழக்கு நாடுகளில் ஏற்பட்டுள்ள யுத்த நிலைமையால் இலங்கைக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகள் தொடர்பில் பாராளுமன்றத்தில் ஒருநாள் விவாதத்தை நடத்த வேண்டும் என்று சுயாதீன எதிரணி எம்.பியான பிவித்துறு ஹெல உறுமய தலைவர் உதய கம்மன்பில சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (17) விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றும் போதே கம்மன்பில இவ்வாறு கோரிக்கை விடுத்தார்.

அதன்போது அவர் மேலும் கூறுகையில், மத்தியக் கிழக்கு நாடுகளில் ஏற்பட்டுள்ள யுத்த நிலைமை நேரடியாக இலங்கைக்கு பாதிப்பை ஏற்படுத்தும். எமது நாட்டை சேர்ந்த இலட்சக் கணக்கானவர்கள் அங்கே வசிக்கின்றனர். அத்துடன் நாங்கள் தேயிலை உள்ளிட்ட பொருட்களை ஏற்றுமதி செய்கின்றோம். எரிபொருள் விலையேற்றத்தால் பாதிப்புகள் ஏற்படலாம் என்றார்.

அதேபோன்று வெளிநாட்டு வேலைவாய்ப்புகள், சுற்றுலாத்துறை ஆகியவற்றுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும். இதனால் இந்த விடயங்கள் தொடர்பில் எதிர்வரும் வியாழக்கிழமை (19) சபையின் அன்றைய நாளுக்குரிய நடவடிக்கைகளை விவாதமின்றி நிறைவேற்றி, மத்திய கிழக்கு நாடுகளில் ஏற்பட்டுள்ள யுத்த நிலைமையால் இலங்கைக்கு ஏற்படக் கூடிய பாதிப்பு தொடர்பாக ஒருநாள் விவாதத்தை நடத்த வேண்டும். இதன்படி எங்களில் 9 எம்.பிக்கள் கையெழுத்திட்டு கடிதமொன்றை சபாநாயகரிடம் கையளித்துள்ளோம் என்றார்.



**கட்சித் தலைவர்கள் கூட்டத்தின் கவனத்திற்கு கொண்டு வருகின்றேன் என்று சபாநாயகர் பதிலளித்தார்**

இதற்கு பதிலளித்த சபாநாயகர், இந்த விடயத்தை கட்சித் தலைவர்கள் கூட்டத்தின் கவனத்திற்கு கொண்டு வருகின்றேன் என்றார்.

# சிசு கொலை தாய்க்கு சிறை

அந்த தாய்க்கு எதிராக முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது. அதன்பின்னர் சட்டமா அதிபரினால் கிளிநொச்சி மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு விசாரணைகள் இடம்பெற்றிருந்தன.

இந்நிலையில், குறித்த வழக்கானது கிளிநொச்சி மேல் நீதிமன்றில் மேல்நீதிமன்ற நீதிபதி ஏ.எம்.ஏ சகாப்தீன் முன்னிலையில் தீர்ப்புகாக கடந்த வாரம் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது சிசுவைக் கொலைசெய்த குற்றத்திற்காக ஐந்து வருட கடூழிய சிறைத்தண்டணை விதிக்கப்பட்டதுடன் பத்தாயிரம் ரூபாய் தண்டப்பணம் செலுத்துமாறும் உத்தரவிடப்பட்டது. தண்டப்பணத்தை செலுத்த தவறும் பட்சத்தில் 12 மாத கால சாதாரண சிறைத்தண்டனை அனுபவிக்கவும் மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது

## சிறுமிகள் இருவரும் ஜோடியாய் மாய்ந்தனர்

இவர்கள் இருவரும் இறுதியாக நடைப்பெற்ற க.பொ.த சாதாரண தரப் பரீட்சை எழுதிவிட்டு பெறுபேறுக்காக காத்திருக்கும் மாணவிகள் ஆவர்.

சம்பவ இடத்திற்கு விரைந்த கிளிநொச்சி பொலிஸார் சடலங்களை மீட்டு கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்துள்ளனர். அத்தோடு இது தற்கொலையா? கொலையா என்ற கோணத்தில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்

## "4/21 விசாரணைகள் அநீதியானவை"

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணைகளில் எந்தவொரு குழுவிடமும் கொடுக்க முடியாத இரகசிய அறிக்கைகள் அவர்களிடம் இருப்பதாக பாதுகாப்பு அமைச்சின் பாதுகாப்பு ஆலோசகர் பேராசிரியர் ரொஹான் குணரட்ன தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நான் அமைத்த ஆணைக்குழுவின் ஆணையாளர்கள் அப்போதிருந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் அறிக்கையொன்றை கையளித்துள்ளனர். இதனை சீஐடியிடமோ, வேறு எவரிடமோ கொடுக்காது இதனை நீங்கள் தனிப்பட்ட ரீதியில் வைத்துக்கொள்ளுங்கள் என்று அவரிடம் கூறியுள்ளனர்.

இதனால் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் இதுவரையில் நடத்தப்பட்ட அனைத்து விசாரணைகளும் அநீதியான முறையிலும் முழுமையாக தவறான வகையிலுமே நடத்தப்பட்டுள்ளது என்பதனை கூறிக்கொள்கின்றேன்.

## மெய் பாதுகாப்பாளர்களுடன் பங்கேற்க அனுமதி வேண்டும்

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் நடந்து கொண்டதால் பாதுகாப்பு செயலாளர் கலந்துகொள்ளும் தெரிவுக்குழுவில் நாம் எமது மெய் பாதுகாப்பாளர்களுடன் கலந்து கொள்வதற்கு அனுமதி வழங்க வேண்டுமென ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி.யான நளின் பண்டார சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்தார்.



பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (17 ) விசேட கூற்றை முன்வைத்தபோதே இவ்வாறு கோரிக்கை விடுத்த அவர் மேலும் பேசுகையில், பாதுகாப்புச் செயலாளர் பாராளுமன்றத்துக்கு அடிக்கடி வருகை தருகிறார். பாராளுமன்றத் தெரிவுக்குழு கூட்டத்தில் கலந்து கொள்கிறார். இதன்போது பாதுகாப்பு செயலாளர் பாராளுமன்ற உறுப்பினருக்கு அச்சுறுத்தல் விடுத்துள்ளார். ஆகவே அவர் கலந்து கொள்ளும் தெரிவுக்குழு கூட்டத்தில் நாங்கள் பங்குப்பற்றும் போது எமது மெய்பாதுகாவலர்களை தெரிவுக்குழு அறைக்குள் உட்பிரவேசிக்க அனுமதி வழங்க வேண்டும்ஏ னெனில் பாதுகாப்பு செயலாளரின் செயற்பாட்டினால் பாராளுமன்ற உறுப்பினரது சிறப்புரிமை மீறப்பட்டுள்ளது. ஆகவே இச்சம்பவம் தொடர்பில் உடனடி விசாரணைகளை மேற்கொள்ளுமாறு வலியுறுத்துகிறோம் என்றார்.

இதன்போது எழுந்த சுயாதீன எதிரணி எம்.பி.யான சந்திம வீரக்கொடி, நாட்டு மக்களின் வரிப்பணம் மோசடி செய்யப்படுவது தொடர்பில் பாதுகாப்பு செயலாளர் கலந்து கொண்ட துறைசார் மேற்பார்வைக் குழுவில் ஒருசில விடயங்களை குறிப்பிட்டேன். அதனை தொடர்ந்து தெரிவுக்குழுவில் வைத்து எனக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது. இதனால் எனது பாராளுமன்ற சிறப்புரிமை மீறப்பட்டுள்ளது.

பாதுகாப்பு செயலாளர் அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் குறிப்பிட்ட கருத்துக்கள் அடங்கிய குரல் பதிவை வெளியிடுமாறு தொடர்ந்து வலியுறுத்துகிறேன். பாராளுமன்ற உறுப்பினர்களின் உரிமைகள் மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டிய பொறுப்பு சபாநாயகருக்கு உண்டு என்றார்.

# 10 ஆயிரம் மில்லி லீற்றர் கசிப்புடன் ஒருவர் கைது

■ புகஜிந்தன்

பருத்தித்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கற்கோவளம் பகுதியில் 10 ஆயிரம் மில்லி லீற்றர் கசிப்புடன் 47 வயதுடைய ஒருவர் திங்கட்கிழமை (16) கைது செய்யப்பட்டுள்ளார்.

காங்கேசன்துறை மாவட்ட விசேட குற்றத்தடுப்பு பிரிவினரின் சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது குறித்த நபரை கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



கைது செய்யப்பட்ட சந்தேகநபர் பருத்தித்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# யானைகளிடமிருந்து தப்பியது குடும்பம்

■ கனகராசா சரவணன்

மட்டு. வவுணதீவு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள நெல்லூரில் குடியிருப்பு பகுதிக்குள் செவ்வாய்க்கிழமை (17) அதிகாலையில் உள்நுழைந்த காட்டு யானைகள் வீடுகளைத் துவசம் செய்துள்ளன. இதனால், இரண்டு வீடுகள் பலத்த சேதங்களுக்கு உள்ளாகியுள்ளன.

யானைகள் வீடுகளை இடித்து வீழ்த்திய நேரத்தில் தாங்கள் உறக்கத்தில் இருந்ததால் தெய்வாதீனமாக உயிர்தப்பினோம் என்றும் வீட்டின் உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.



காட்டுயானை, தென்னை, மா, வாழைமரம் போன்ற மரங்களை முறித்துச் சேதப்படுத்தியதுடன், விவசாயத்தையும் நாசப்படுத்தியது. யானைகள் இரு வீடுகளைத் தாக்கி உடைத்தபோது, உறக்கத்தில் இருந்த 2 மாதக் குழந்தை, தாய் மற்றும் அடுத்த வீட்டில் உறக்கத்தில் இருந்த 4 சிறுவர்கள் உட்பட்ட குடும்பத்தினர் தெய்வாதீனமாக உயிர் தப்பி அங்கிருந்து ஓடியுள்ளனர்.

# நிரம்பி வழியும் நீர்த்தேக்கங்கள்



■ சுதத் எச்.எம்.ஹேவா

மத்திய மலைநாட்டின் மேற்குக் கரைப் பகுதிகளில் பெய்து வரும் மழையுடனான காலநிலை காரணமாக காசல்ரீ, மவுஸ்ஸாக்கலை, லக்சபான, விமலசுரேந்திர மற்றும் நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் நிரம்பி வழிவதாக நீர்த்தேக்கங்களுக்குப் பொறுப்பான அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அதன்படி, செவ்வாய்க்கிழமை (17) காலை நிலைவரப்படி, காசல்ரீ நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் 05 அடி 02 அங்குலமும், வான்வெளியில் இருந்து 02 அங்குலமும், லக்சபான நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் வான்வெளியில் இருந்து 05 அங்குலமும், விமலசுரேந்திர நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் 07 அடியும் குறைந்துள்ளது.

நிரம்பி வழியும் மட்டம் மற்றும் மவுஸ்ஸாக்கலையின் நீர்மட்டம் 01 அடி மற்றும் 08 அங்குலங்கள் நிரம்பி வழிகிறது.

மேலும், பள்ளத்தாக்கு நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் நிரம்பி வழியும் மட்டத்தை எட்டியுள்ளதால், அதன் வான் கதவு ஒன்றில் 03 வாய்க்கால்கள் திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், இந்த நீர்த்தேக்கங்களின் நீர் அதிகபட்சமாக நீர் மின்சாரம் உற்பத்திக்காக எடுத்துச் செல்லப்படும் எனவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.


# கூரையை பிய்த்து திருடிய கொள்ளையனுக்கு வலை

■ நவி

கம்பளை நகரில் உள்ள நகைகடையொன்றின் கூரையை உடைத்து, கடைக்குள் புகுந்து கொள்ளையடித்த நபருக்கு வலை விரிக்கப்பட்டுள்ளதாக கம்பளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவர், கடைக்குள் புகுந்து திருடும் காட்சி கமெராக்களில் பதிவாகியுள்ளது. அதனை அடிப்படையாக வைத்தே வலை வரிக்கப்பட்டுள்ளது.

கூரையை பிய்த்துக்கொண்டு திங்கட்கிழமை (16) கடைக்குள் புகுந்து, திருடப்பட்ட தங்கம்,



வெள்ளி, மாணிக்கக் கற்கள் போன்ற பொருட்களின் பெறுமதி இன்னும் கணக்கிடப்படவில்லை.

இச்சம்பவம் தொடர்பில் கம்பளை பொலிஸார், கைரேகை அதிகாரிகள் மோப்ப நாய்கள் சகிதம், விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஆட்சி செய்வது யார்?

## இராதாவுக்கு சந்தேகம்

■ டி.சங்கீதன்

இந்த அரசாங்கத்தைக் கொண்டு செல்வது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவா? அல்லது ராஜபக்ச சகோதரர்களா? அல்லது சர்வதேச நாணய நிதியமா? என்ற கேள்வி மக்களுக்கு எழுந்துள்ளது என்று தெரிவித்துள்ள மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் ஒவ்வொரு தரப்பினரும் ஒவ்வொரு கொள்ளைகளில் இருக்கின்றனர் எனக் குற்றஞ்சாட்டியுள்ளார்.

எனவேதான், யாருடைய கொள்கையில் ஆட்சி நடைபெறுகின்றதா என்ற சந்தேகம் மக்களுக்கு எழுந்துள்ளது



என்றுள்ளார். மலையக மக்கள் முன்னணியின் மக்கள் சந்திப்பு கூட்டம் மஸ்கெலியா லிது மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை (15) நடைபெற்றுள்ளது.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய இராதாகிருஷ்ணன்,

பொருட்களின் விலைகள் நாளாந்தம் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. ஆனால் யாருடைய சம்பளமும் அதிகரிக்கப்படவில்லை. குறிப்பாக மலையக மக்களின் சம்பளம் அதிகரிக்கப்படவில்லை. பெருந்தோட்டங்களில் வேலை நாட்களும் மிகவும் குறைவாகவே இருக்கின்றது. இவ்வாறான ஒரு நிலைமையில் தங்களுடைய வருமானத்தில் என்ன செய்வது என்பதைத் தெரியாமல் மக்கள் திண்டாடுகின்றார்கள்.

உணவு பாடசாலை செலவினங்கள் இவற்றைக் கட்டுப்படுத்த முடியாமல் இரண்டு நேர உணவையும் உட்கொள்ள முடியாது துர்ப்பாக்கியமான நிலைமைக்கு மக்கள் சென்றிருக்கின்றார்கள்.

எந்த ஒரு நிவாரணமும் பெருந்தோட்ட மக்களுக்கு முறையாகக் கிடைப்பதில்லை. அரசாங்கம் பெருந்தோட்ட மக்களை ஒரு பொருட்டாக நினைப்பதில்லை. அவர்களுக்கென ஏன் ஒரு விசேட திட்டத்தை அமுல்படுத்த முடியாது என்றும் கேள்வியெழுப்பினார்.




# காதலனின் உயிரைக் குடித்த காதலியின் எஸ்.எம்.எஸ்

■ எம்.றொசாந்த்

"தன்னை உடனடியாக திருமணம் செய். இல்லை எனில் உயிர் துறப்பேன்" என காதலி அனுப்பிய குறுந்தகவலை பார்த்த காதலன் தன் உயிரை மாய்த்துக்கொண்டுள்ளார்.

யாழ்ப்பாணம் - கொழும்புத்துறை பகுதியைச் சேர்ந்த 20 வயதுடைய இளைஞனே திங்கட்கிழமை (16) தன்னுயிரை உயிர் மாய்த்துக்கொண்டுள்ளார்.

உயிரிழந்த இளைஞனின் காதலி திருமண வயதை அடைந்திருக்காத நிலையில், இரு வீட்டிலும் அவர்களின் காதல் விவகாரம் தெரிந்துள்ளது. காதலுக்கு எதிர்ப்பும் கிளம்பியுள்ளது.

இந்நிலையில் "என்னை உடனே திருமணம் செய். இல்லையென்றால் நான் சாகிறேன்" என காதலி காதலனுக்கு குறுந்தகவல் அனுப்பியுள்ளார். அதனைப் பார்வையிட்ட காதலன் தன் உயிரை மாய்த்துக்கொண்டுள்ளார்.



### தேசிய ஒற்றுமைக்கும் நல்லிணக்கம்

# அலுவலகத்தை ஸ்தாபிக்க சட்டமூலம் சமர்ப்பிப்பு

தேசிய ஒற்றுமைக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகத்தை ஸ்தாபிப்பதற்கான சட்டமூலத்தை அரச தரப்பின் தரப்பின் பிரதம கொறடாவும் அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க, பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (17) இடம்பெற்ற அமர்வின் போது சபையில் சமர்ப்பித்துள்ளார்.

தேசிய ஒற்றுமைக்கும், நல்லிணக்கத்துக்குமான அலுவலக ஸ்தாபித்தல் சட்டமூலத்தின் நோக்கம் தொடர்பில் பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹனதீர சபைக்கு அறிவிக்கையில், நாட்டில் தேசிய ஒற்றுமையையும், நல்லிணக்கத்தையும் உறுதிப்படுத்தி ஊக்குவிக்கும் பொருட்டு தேசிய ஒற்றுமைக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகத்தைத் தாபிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும்,

அதன் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை எடுத்துக் கூறுவதற்கும் அத்துடன், அவற்றுடன் தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு வகையில் சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார்.

# வைத்தியரின் நகை அபகரிப்பு

காலி - கராபிட்டிய பொது வைத்தியசாலையின் சிறுவர் வைத்திய நிபுணர் ஒருவர் அணிந்திருந்த தங்கச் சங்கிலியை அபகரித்துச் சென்றுள்ள சம்பவமொன்று செவ்வாய்க்கிழமை (17) இடம்பெற்றுள்ளது.

அபகரிக்கப்பட்ட தங்கச் சங்கிலியின் பெறுமதி சுமார் 140,000 ரூபாய் என வைத்தியர் செய்த முறைப்பாட்டில் தெரிவித்துள்ளதாகவும் அபகரித்தவருக்கு வலை வீசப்பட்டு வருவதாகவும் காலி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# ஹர்த்தாலுக்கு ஆதரவு வழங்குங்கள்

## தமிழ்தேசிய கட்சிகள் கோரிக்கை

க. அகரன்

வெள்ளிக்கிழமை (20) முன்னெடுக்கப்படவுள்ள ஹர்த்தால் போராட்டத்துக்கு வவுனியா மாவட்டத்தில் உள்ள அனைத்து தரப்புக்களும் ஒத்துழைப்பை வழங்குமாறு தமிழ்த் தேசிய கட்சிகளின் கூட்டமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

குறித்த விடயம் தொடர்பான கலந்துரையாடல் வவுனியா வைரவபுளியங்குளத்தில் அமைந்துள்ள தமிழீழ விடுதலை இயக்கத்தின் காரியாலயத்தில் திங்கட்கிழமை (16) இடம்பெற்றுள்ளது.

அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு மேலும் கருத்து தெரிவித்த கட்சிகளின் பிரதிநிதிகள்,

முல்லைத்தீவு நீதிபதி சரவணராஜா மீதான அச்சுறுத்தலின் மூலம் நீதித்துறை சுயாதீனமாகச் செயற் படமுடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. அத்துடன், தமிழர் பிரச்சினைக்கு உள்நாட்டில் நீதியைக் காணமுடியாது



என்று நாம் வலியுறுத்திய விடயத்திற்கு இந்த சம்பவம் சிறந்த எடுத்துக்காட்டாகவும் அமைந்துள்ளது.

இந்த சூழ்நிலையில், தமிழ் மக்களின் கவனத்தைத் திசைதிருப்பும் செயற்பாட்டை இந்த அரசாங்கமும், ஜனாதிபதியும் முன்னெடுத்து வருகின்றனர். எனவே, இந்த அரசியல் சூழ்நிலையில் ஜனாதிபதியின் ஒவ்வோர் அரசியல் நகர்வுகளையும் நுணுக்கமாக ஆராய்ந்து எதிர்காலத்தில் எப்படி செயற்படவேண்டும் என்ற காத்திரமான முடிவை எடுக்கவேண்டிய கட்டாயத்திற்குத் தமிழ்மக்களும் தமிழ்த்தேசிய கட்சிகளும் தள்ளப்பட்டுள்ளது.

எனவே, எதிர்வரும் வெள்ளிக்கிழமை (20) வடக்கு, கிழக்கு மாகாணம் தழுவிய ரீதியில் முன்னெடுக்கப்படவுள்ள ஹர்த்தால் போராட்டத்திற்குப் பொதுமக்கள் வர்த்தக சங்கத்தினர், பேருந்து உரிமையாளர் சங்கம், முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கம் உட்பட அனைத்து பொது அமைப்புக்களும் முழுமையான ஒத்துழைப்பை வழங்கி போராட்டத்திற்கு வலுசேர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம்.

குறித்த கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினர் வினோநோக ராதலிங்கம், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், தமிழ் மக்கள் விடுதலைக்கழகம் சார்பில் சந்திரகுலசிங்கம் மோகன், தமிழரசுக்கட்சி சார்பில் ந.கருணாநிதி, ஜனநாயக போராளிகள் கட்சி சார்பில் க.துளசி உட்பட பலர் கலந்துகொண்டுள்ளனர்.

# புகையிலையை வாங்கியவர் 3 கோடி ரூபாய் மோசடி

■ எம்.றொசாந்த்

யாழ்ப்பாணம் - ஊர்காவற்துறை பகுதியில் புகையிலை விவசாயிகளிடம் புகையிலையைக் கொள்வனவு செய்ததற்கான பணத்தைக் கொடுக்காது ஒருவர் ஏமாற்றிய சம்பவம் இடம்பெற்றுள்ளது.

புகையிலை விவசாயிகளிடம், வியாபாரிகள் புகையிலையைத் தோட்டத்துடன், பேரம் பேசி, அதனை ஒரு விலைக்கு வாங்கி, அறுவடை செய்து, கொழும்பு உள்ளிட்ட வெளி மாவட்டங்களுக்கு கொண்டு சென்று விற்பனை செய்வார்கள்.

அவ்வாறான வேளைகளில், சிலர் பேசிய பணத்தினை உடனேயே விவசாயிகளிடம் கையளித்து விடுவார்கள். சில வியாபாரிகள் "புகையிலை விற்று காசு தாறேன்" என சில தினங்களுக்கு அவகாசமாகக் கேட்பார்கள். அதற்கு விவசாயிகள் சம்மதித்தால் புகையிலையை வாங்கி செல்வார்கள். இதன்போது எழுத்து மூலமான அல்லது சட்ட ரீதியான எந்த ஒப்பந்தமும் இல்லாது நம்பிக்கை அடிப்படையில் லையே அந்த கொடுக்கல் வாங்கல் நடைபெறும்.



இந்நிலையில், ஊர்காவற்துறையைச் சேர்ந்த 25 புகையிலை விவசாயிகளிடமிருந்து சுமார் 3 கோடி ரூபாய்க்கும் அதிகமான புகையிலைகளை கொள்வனவு செய்தவர், அதற்கான பணத்தினை "புகையிலையை விற்றுத் தருகிறேன்" என கூறி வாங்கி சென்று 2 மாதங்களுக்கு மேலாகியும் பணத்தினை கொடுக்கவில்லை.

அதனால் தாம் ஏமாற்றப்பட்டு விட்டோம் என யாழ். மாவட்ட குற்றத்தடுப்பு புலனாய்வு பிரிவினரிடம் பாதிக்கப்பட்ட விவசாயிகள் முறையிட்டதையடுத்து, பொலிஸார் குறித்த வியாபாரியை விசாரணைக்கு அழைத்தபோது அவர் தனது சட்டத்தரணியுடன் சமூகம் அளித்துள்ளார்.

விசாரணைகளின்போது, "தான் வாங்கிய புகையிலையை விற்பனை செய்யவில்லை எனவும் அதனால் இன்னமும் இரு மாத கால அவகாசம் தந்தால், புகையிலைக்கான பணத்தைக் கொடுக்க தயார்" என கூறியுள்ளார். அத்துடன், "தனது சட்டத்தரணி ஊடாக சத்தியக் கடதாசி முடித்துக் கொடுக்கவும் தயார்" எனவும் கூறியுள்ளார்.

அதற்கு விவசாயிகளும் சம்மதித்ததை தொடர்ந்து, இரு மாத கால பகுதிக்குள் பணம் தராவிடின் நீதிமன்றில் வழக்கு தொடருங்கள் என விவசாயிகளுக்கு அறிவுறுத்திய பொலிஸார், வியாபாரங்களின்போது, வாய் வார்த்தை நம்பிக்கையை விட சட்ட ரீதியான ஒப்பந்தங்களை மேற்கொள்ளுங்கள் எனவும் விவசாயிகளுக்கு பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

# பயனாளிகளை அலைக்கழித்து கடனாளியாக்காதீர்

ஒவ்வொரு மாதமும் ஒருசில நாட்களில், தபால் காரியாலயங்கள் சமூர்த்தி வங்கிகள் உள்ளிட்டவற்றை அவதானித்தால் இயலாதவர்கள், வயோதிபர்கள், விடியற்காலை ஏழு மணிக்கு முன்பிருந்தே வரிசையில் காத்துக்கிடப்பார்கள். அவர்களுக்கென டோக்கன்கள் வழங்கப்படும். அதனை வாங்கிக்கொண்டு கால்கடுக்க, தங்களுக்கான நேரம் வரும் வரையிலும் காத்திருப்பர்.

கையில் சிறு தண்ணீர் போத்தலை வைத்துக்கொண்டும், ஏதாவது சிற்றுண்டியைச் சாப்பிட்டுக்கொண்டு காத்திருப்பர். காலையிலேயே வீட்டிலிருந்து வந்தவர்கள் மாலை வேளையிலே வீடுகளுக்குத் திரும்புவர். கால்கடுக்கக் காத்திருந்த பலரும் மயங்கி விழுந்துவிடுவர்.

அரசாங்கத்தால் வழங்கப்படும் சொற்ப பண சலுகையை பெற்றுக்கொள்வதற்கே இவ்வாறு காத்திருப்பர். தாங்கள் எதிர்பார்த்தபடி பணம் கிடைக்காவிட்டால், ஏக்கத்துடனும் மன விரக்தியுடனும் வீட்டுக்குத் திரும்பவேண்டிய துர்ப்பாக்கியசாலிகள்தான் அவர்கள். அந்தளவுக்கு அரசாங்கத்தின் செயற்பாடுகள் உள்ளன.

சமூர்த்தி உதவித் தொகையைப் பெறுவோர், வயோதிபர்களுக்கான நிதியைப் பெற்றுக்கொண்டவர்கள், இதுவரை காலமும் எவ்விதமான அலைச்சலும் இன்றி, தங்களுக்கான இலவச சலுகையை மிக இலகுவாகவே பெற்றுக்கொண்டனர்.

எனினும், அவர்களில் பெரும்பாலானவர்கள் அஸ்வசும திட்டத்தின் கீழ் இணைக்கப்பட்டனர். இதுவே அவர்களுக்கு பெரும் தலையிடியாய் மாறிவிட்டது. புதிதாக வங்கிக் கணக்குகளைத் திறப்பதற்காக அரச வங்கிகளின் முன்பாக வரிசையில் நின்றனர். அதற்கான வழக்கப்பட்ட ரசீதை பெற்றுக்கொண்டு பிரதேச செயலகங்களுக்கு அலைந்தனர்.

அவ்வாறானவர்களில் ஒருசிலருக்கு மட்டுமே நிதி கிடைத்தது. ஏனையோர் ஏமாந்து நிற்கின்றனர். முதியோருக்கான தொகையையும், சமூர்த்தியையும் இழந்து பலரும் நிர்க்கதியாகிவிட்டனர்.

முச்சக்கரவண்டி காரர்களிடம் கடன் சொல்லி, வீட்டிலிருந்து வங்கிகளுக்கு வந்தாலும், அவர்களுக்கு உரிய விளக்கங்கள் கொடுப்பதில்லை. பணம் இன்னும் வரவில்லை, சமூர்த்தி கொடுப்பனவுகளை எம்மால் வழங்கமுடியாது. அங்குச் செல்லுங்கள், இங்குச் செல்லுகள் என அலைக்கழிக்கப்படுகின்றனர்.

தங்களுடைய சிறு, சிறு செலவுகளுக்கும் வைத்திய செலவுகளுக்காகவும் அரசாங்கத்திடம் இலவச நிதிக்காகக் கையேந்தி நிற்கும் முதியோர் பலர், முச்சக்கரவண்டி காரர்களுக்கு இறுதியில் கடனாளியாகிவிடுகின்றனர்.

அஸ்வசும திட்டத்தின் கீழ் தங்களைப் பதிவுச் செய்துகொண்ட சுமார் 800,000 குடும்பங்களுக்கு இன்னும் ஜூலை மாதத்திற்கான கொடுப்பனவுகள் கிடைக்கவில்லையெனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில், கருத்து தெரிவித்துள்ள நலன்புரி நன்மைகள் சபையின் மேலதிக ஆணையாளர் (செயல்பாடு) ரத்னசிறி ராஜபக்ச ஜூலை மாதம் தொடர்பான முழு கொடுப்பனவுகள் 12 இலட்சம் குடும்பங்களுக்கு மாத்திரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் ஏனைய குடும்பங்களுக்கான கொடுப்பனவுகளை அடுத்த இரண்டு மாதங்களில் வழங்க முடியும் எனவும் தெரிவித்துள்ளார்.

அப்படியாயின், ஓகஸ்ட், செப்டெம்பர் மற்றும் ஒக்டோபர் ஆகிய மாதங்களுக்கான கொடுப்பனவுகள் இன்னும் பிந்தும் என்பதே அர்த்தமாகும். அதற்காக இன்னும் எத்தனை தடவைகள் ஏறியிறங்க வேண்டிய நிலைமை ஏற்படுமெனப் பயனாளிகள் அஞ்சுகின்றனர் அதுவே உண்மையாகும்.




## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

உரிமை என்பது தமக்கானது மட்டும் எனும் எண்ணம் ஆள்பவர்களுக்கு உருவாகிவிட்டது. அத்துடன், சுதந்திரமும் தங்களுக்கான சொத்து என வெளிப்படையாகக் காட்டுகின்றனர். நடத்தையில் நீதி, நியாயம் அறவே இல்லை.

தங்கள் செயல்களில் இறுமாப்பு அடைகின்றவர்கள், எதிர்காலத்தின் தாக்கங்களை உணர்வதே இல்லை. உலக மாற்றங்கள் இயல்பானவை. சர்வாதிகாரம் என்பது வெறும் புஷ்வாணம் ஆகும் என்பதை உணர்கின்றார்கள் இல்லை. மக்கள் பலம் பற்றி அறியாமல் இருப்பது வீழ்ச்சியைத் தரும்.

இத்தகையவர்கள் தங்களைத் தாங்களே இழக்கின்றார்கள். கற்பனையில் பல அரசாங்கங்கள் இயங்குகின்றன.

மக்கள் குரல்கள் இவர்களுக்குக் கேட்கவில்லை என நடிக்கிறார்கள். எதுவும் நிரந்தரம் இல்லை. பொய்மை கருகிவிடும். கர்மா எவரையும் விட்டுவிடாது. கர்மா, செய்த தவறுகளுக்கு தண்டனை வழங்கும்.

இயற்கை நியதிகூட, 'கர்மா' என்பதில் ஐயம் இல்லை. ஆண்டவன், துட்டர்களை மன்னிப்பதும் இல்லை, மறப்பதும் இல்லை.

பருத்தியூர் பாலா. வயிரவநாதன்

# கட்சித் தாவல் எப்போதும் கண்டிக்கத் தக்கதா?



எம்.எஸ்.எம். ஐயூப்

முன்னாள் சுற்றாடல்துறை அமைச்சர் நஸீர் அஹ்மத்தை ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸிலிருந்து நீக்கியமை சட்டபூர்வமானது என்று உயர்நீதிமன்றம் கடந்த ஒக்டோபர் 6ஆம் திகதி தீர்ப்பு வழங்கியது. அதன் காரணமாக அவரது பாராளுமன்ற உறுப்பினர் பதவி நீக்கப்பட்டு அவருக்கு பதிலாக மு.கா சார்பில் அலி சாஹிர் மௌலானா பாராளுமன்றத்துக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

உயர்நீதிமன்றம் வழங்கிய இந்தத் தீர்ப்பானது எதிர்கால பல வழக்குகளுக்கு முன்னுதாரணமாக (precedence) அமைந்துள்ளது என்று ஒரு கருத்து தற்போது பரவியிருக்கிறது. அதாவது இந்தத் தீர்ப்பை அடுத்து, அதனை முன்னுதாரணமாகக் கொண்டு பல அரசியல் கட்சிகள் அக்கட்சிகளிலிருந்து விலகிய பல பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராகவும் வழக்குத் தாக்கல் செய்து அவர்களது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இல்லாமல் செய்ய நடவடிக்கை எடுக்கப்போவதாகப் பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகியுள்ளன.

குறிப்பாக, ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியில் இருந்து சுமார் 25 பாராளுமன்ற உறுப்பினர்கள் வெளியேறியுள்ளனர். அவர்கள் முன்னாள் அமைச்சர்களான டலஸ் அலஹப்பெரும் மற்றும் அனுர பிரியதர்ஷன யாப்பா ஆகிய இருவரின் தலைமையில் இரண்டு குழுக்களாகச் செயற்பட்டு வருகின்றனர். அவர்களுக்கு எதிராக ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணி இப்போது நடவடிக்கை எடுத்து அவர்களுக்குப் பதிலாக தமக்கு விசுவாசமானவர்களை பாராளுமன்றத்துக்கு நியமிக்கலாம் என்றும் செய்திகள் வெளியாகி இருந்தன. அதேவேளை சொந்த நலனுக்காக எப்போதும் ஆளும் கட்சியோடு இணைந்து செயற்படும் முஸ்லிம் எம்பிக்களுக்கு இனி அவ்வாறு செய்ய முடியாது என்றும் பலர் கருத்து தெரிவிக்கின்றனர்.

நீண்ட காலமாக மு.கா மற்றும் இலங்கை தமிழரசு கட்சி உள்ளிட்ட அரசியல் கட்சிகளுக்கும் அவற்றின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையே ஏற்பட்ட பிணக்குகளை விசாரித்த உயர் நீதிமன்றம் அந்த பாராளுமன்ற உறுப்பினர்களுக்குச் சாதகமாகவே தீர்ப்பு வழங்கியுள்ளது. எனவே நஸீர் அஹ்மத் தொடர்பான வழக்கின் தீர்ப்பு அந்த நிலைமையை மாற்றியுள்ளது என்ற அடிப்படையிலேயே இவ்வாறான செய்திகள் வெளியாகின்றன.

இவ்வாறான வழக்குகளின்போது பாராளுமன்ற உறுப்பினர்களுக்குச் சாதகமாகவே தீர்ப்பு வழங்கப்படுகிறது என்ற கருத்தோடு இணைந்த கதையொன்றும் உலாவுகிறது. ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் இரகசிய அரசியல் தொடர்புகளை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் ஐக்கிய தேசிய கட்சி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சரத் அமுனுகமவை 1999ஆம் ஆண்டு அக்கட்சியிலிருந்து நீக்கியது. அதன் காரணமாக அவரது பாராளுமன்ற உறுப்பினர் பதவி இரத்தாகும் நிலை ஏற்படவே அவர் ஐ.தே.கவின் முடிவுக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல் செய்தார். அதனை விசாரித்த சர்ச்சைகளுக்கு பெயர்பெற்ற முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா. அமுனுகமவுக்கு சாதகமாக தீர்ப்பை வழங்கினார். அந்தத் தீர்ப்பே கட்சிகளுக்கும் எம்.பிக்களுக்கும் இடையிலான வழக்குகளின் போது, இப்போது முன்னுதாரணமாக எடுத்துக்கொள்ளப்படுகிறது என்றும் அதனால் எப்போதும் கட்சிகளின்றி எம்.பிக்களுக்கு சாதகமாக தீரப்பு வழங்கப்படுகிறது என்றும் பொதுவாக நம்பப்பட்டு வந்தது.

எனினும், இது தொடர்பாக 2014ஆம் ஆண்டு பத்திரிகையொன்றுடன் நடத்திய நேர்காணலொன்றின்போது நீங்கள் கட்சித் தாவலை சட்டப்பூர்வமாக்கியுள்ளீர்கள் என்று ஊடகவியலாளர் ஒருவர் சரத் சில்வாவிடம் கூறினார். அதற்குப் பதிலளித்த சரத் சிலவா அதனை நான் செய்தேன் என்பதே பிழையான கருத்தாகும். நான் வழக்கு விசாரணையில் கலந்து கொள்ளாத ஒரு சந்தர்ப்பத்தில் பதில் பிரதம நீதியரசராகக் கடமையாற்றிய நீதியரசர் ரஞ்சித் அமரசிங்கவே அமுனுகமவின் வழக்கின் தீர்ப்பை வழங்கினார் என்றார்.

அமுனுகமவின் வழக்கின் பின்னர் நஸீர் அஹ்மத்தின் வழக்கு வரை கட்சிகளுக்கும் எம்.பிக்களுக்கும் இடையிலான வழக்குகளின் போது தொடரந்து எம்.பிக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்பது உண்மையாகும். ஆயினும் அமுனுகமவின் வழக்கை முன்னுதாரணமாகக் கொண்டே அவ்வாறு தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்பது உண்மையல்ல. பின்னர் வழங்கப்பட்ட தீர்ப்புக்கள் வேறு காரணங்களின் அடிப்படையிலேயே வழங்கப்பட்டுள்ளன.

அதேவேளை, அமுனுகமவின் வழக்கின் போது தான் முதன் முதலில் எம்.பிக்கு சாதகமாகத் தீர்ப்பு வழங்கப்பட்டது என்பதும் பிழையாகும். அதற்குப் பின்னர் மட்டுமல்லாது முன்னரும் அவ்வாறான தீர்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. உதாரணமாக, 1993ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பாராளுமன்ற உறப்பினர் திலக் கருணாரத்ன அக்கட்சியைப் பகிரங்கமாக விமர்சித்தார். அதனையடுத்து ஸ்ரீ.ல.சு.க அவரை அக்கட்சியிலிருந்து நீக்கியது. அதன் காரணமாக அவரது எம்.பி பதவி இல்லாமல் போகும் நிலை உருவாகவே அவர் நீதிமன்றத்தை அணுகினார். அவரது மனுவை விசாரித்த உயர்நீதிமன்றம் அவரை சு.க.விலிருந்து நீக்கியமை சட்டப்பூர்வமானதல்ல என்று தீர்ப்பு வழங்கியது.

அமுனுகமவின் வழக்கின் தீர்ப்பையடுத்து, கட்சிக்கு எதிராக எம்.பி தாக்கல் செய்த பல வழக்குகளில் தொடர்ந்து எம்.பிக்கு சாதகமாகவே தீர்ப்பு வழங்கப்பட்டது என்பது உண்மையாயினும் அனைத்து வழக்குகளினதும் தீர்ப்புக்கள் ஒரே காரணத்துக்காக எம்.பிக்கு சாதகமாக வழங்கப்படவில்லை என்பது கீழ்க் காணும் வழக்குத் தீர்ப்புக்களைப் பார்த்தால் தெளிவாகிறது.

2002ஆம் ஆண்டு மு.கா எம்.பி பஷீர் சேகுதாவூத்தை மு.கா உள்ளிட்ட கூட்டணியான தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவி பேரியல் அஷ்ரப் அக்கூட்டணியிலிருந்து நீக்கியதாக அறிவித்தார் இந்த அறிவித்தலை எதிர்த்து சேகுதாவூத் உயர்நீதிமன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல் செய்தார். தாம் மு.கா உறுப்பினரேயன்றி தேசிய ஐக்கிய முன்னணியின் உறுப்பினர் அல்ல என்றும் எனவே பேரியலின் செயலால் தமது எம்.பி பதவி இல்லாமல் போகாது என்று அவர் வாதிட்டார் நீதிமன்றம் அதனை ஏற்றுத் தீர்ப்பு வழங்கியது.

2006ஆம் ஆண்டு மு.கா. மட்டக்களப்பு மாவட்ட எம்.பி அமீர் அலியை கட்சியிலிருந்து நீக்கியபோது, அமீர் அலியும் நீதிமன்றம் சென்றார். அவரது வழக்கை விசாரித்த பிரதம நீதியரசர் சரத் சில்வா உள்ளிட்ட நீதியரசர்கள் குழு கட்சியொன்றிலிருந்து ஒருவரை நீக்குவதாக இருந்தால் அது மக்கள் நலனையும் கருத்தில் கொண்டே மேற்கொள்ளப்பட வேண்டும் என்று கூறி அமீர் அலிக்கு சாதகமாகத் தீர்ப்பு வழங்கியது. இது சட்டத்துறைக்கு அப்பால் சென்று அரசியல்துறையை அண்மித்த தீர்ப்பாக இருந்தது.

கட்சிக்கு எதிராக எம்.பி ஒருவர் தாக்கல் செய்த வழக்கொன்றில் எம்.பிக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்ட மற்றொரு சம்பவம் 2010ஆம் ஆண்டு இடம்பெற்றது. இது இலங்கை தமிழ் அரசு கட்சிக்கு எதிரான தீர்ப்பாகும். 2010ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் எச்.பி.பியசேன என்பவர் தமிழரசுக் கட்சியின் சார்பில் திகாமடுல்ல (அம்பாறை) மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். அதே ஆண்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச 18ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை முன்வைத்தபோது பியசேன தமிழரசுக் கட்சியின் முடிவைப் புறக்கணித்து அந்தத் திருத்தத்துக்கு ஆதரவாக வாக்களித்தார். எனவே, தமிழரசுக் கட்சி அவரை வெளியேற்றியது. அவர் அதனை எதிர்த்து மனுவொன்றைத் தாக்கல் செய்தார்.

கட்சியின் ஒழுக்காற்றுக் குழுவின் தீர்ப்பின் படியே பியசேன கட்சியிலிருந்து நீக்கப்பட்டதாகக் கட்சியின் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராஜா தெரிவித்து இருந்தார். ஒழுக்காற்றுக் குழுவுக்கு அவ்வாறான முடிவை எடுக்க அதிகாரம் இல்லை கட்சியின் மத்தியக் குழுவுக்கே அந்த அதிகாரம் இருக்கிறது என்று பியசேனவின் சட்டத்தரணிகள் வாதிட்டனர். அதனை ஏற்ற நீதிமன்றம் அவருக்குச் சாதகமாகத் தீர்ப்பை வழங்கியது.

எனவே, அமுனுகமவின் வழக்கைத் தொடர்ந்து அந்த வழக்கை முன்னுதாரணமாகக் கொண்டே கட்சித் தாவல் வழக்குகளில் தீர்ப்பு வழங்கப்படுகிறது என்ற கருத்து பிழையானதாகும். எனவே நஸீர் அஹ்மத்தின் வழக்கின் தீர்ப்பை அடுத்து டலஸ் அலஹப்பெரும போன்ற பொதுஜன முன்னணியிலிருந்து வெளியேறியவர்களின் எம்பி பதவி பறிபோகும் நிலை உருவாகி இருக்கிறது என்ற ஊடகங்களில் வெளியாகும் கருத்து ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல.

நஸீர் அஹ்மத்தின் வழக்குக்குப் பின்னரும் கடந்த 13ஆம் திகதியும் உயர் நீதிமன்றம் கட்சித் தாவல் வழக்கொன்றில் எம்.பி அத்துரலியே ரத்தன தேரருக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கியிருக்கிறது. கட்சித் தாவல் எப்போதும் கண்டிக்கத் தக்கதல்ல. சாதாரண மக்கள் மத்தியில் கட்சிகள் தொடர்பாக ஏற்படும் மனமாற்றத்தின் காரணமாகவே ஆட்சி மாற்றங்கள் இடம்பெறுகின்றன.

அதனைச் சந்தர்ப்பவாதம் என்று கூற முடியாது. ஒரு கட்சி தவறான வழியில் செல்வதாக இருந்தால் தமது மனசாட்சிக்கு ஏற்ப எம்.பிக்கள் செயற்படுவதைக் குறைகூற முடியாது. ஆயினும் அதற்கு தற்போதைய அரசியலமைப்பில் இடம் இல்லை.

அதேவேளை, பட்டம், பதவிகள், பணம் மற்றும் சலுகைகள் ஆகியவற்றுக்காகக் கட்சிக்கு எதிராகச் செயற்படுவது மனசாட்சியற்ற செயலாகும்.

கடந்த பொதுத் தேர்தலின்போது பொதுஜன முன்னணியையும் ராஜபக்ஷக்களையும் திட்டித் தீர்த்து அதன் மூலம் பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட மு.கா எம்.பிக்கள் ராஜபக்ஷக்கள் தொடர்ந்தும் பதவியில் இருப்பதற்காகக் கொண்டு வரப்பட்ட 20ஆவது அரசியலமைப்புத் திருத்துக்கு ஆதரவாக ஏன் வாக்களித்தார்கள் என்பதை அவர்கள் தான் தெளிவுபடுத்த வேண்டும். இலங்கையில் 95 வீத கட்சித் தாவல்கள் சொந்த நலன் கருதியே மேற்கொள்ளப்படுகின்றன.

## கழதங்கள்

## அழிவடையும் மட்டக்களப்பு வாவி

இலங்கையின் இரண்டாவது மிகப்பெரிய வாவியான மட்டக்களப்பு வாவியில் கலக்கும் கழிவுகள் மற்றும் குப்பைகளால் குறித்த வாவி அழிவடைவதுடன், வாவியின் அருகிலுள்ள மகாத்மா காந்தி பூங்காவில் பொழுதைக் கழிக்க வருவோர்களும் வாவியில் மீன்பிடியாளர்களும் பெரும் பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளனர்.

மிகப் பெரிய இயற்கை வாவியான மட்டக்களப்பு வாவி உலகப் புகழ்பெற்ற அதிசய வாவியாகும்.

இந்த வாவியிலுள்ள மீன்கள் பாடியதாகவும் அதனை ஆங்கிலேயர் ஆட்சியின்போது ஒலிப்பதிவு செய்ததாகவும் அதனாலேயே மட்டக்களப்பிற்கு பாடும் மீன்கள் கூடும் நகரம் என்றும் மீன்பாடும் தேனாடு என்றும் பெயர் வந்ததாக வரலாறுகள் தெரிவிக்கின்றன.

இப்போது இந்த வாவியின் ஓரங்களில் குப்பைகளைக் கொட்டுவதாலும் பொலீத்தீன் மற்றும் பிளாஸ்ரிக் கழிவுகளை வீசுவதாலும் வாவி மிகவும் அசுத்தமடைந்து வாவியின் கரையோரப் பகுதிகள் மாசடைந்து காணப்படுகின்றது.

இதனால் வாவியோடு இணைந்துள்ள காந்தி பூங்காவில் ஓய்விற்காய் வருபவர்கள் பெரும் அவலங்களை எதிர்கொண்டுள்ளதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த வாவியில் இம்மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் 15 ஆயிரம் குடும்பங்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ரீ.எல்.ஜவ்பர்கான்





# நோமோஃபோபியா வலையில் சிக்கி தவிப்பவரா நீங்கள்?



பாத்திமா சபா
(இரண்டாம் வருடம் ஊடக கற்கைகள் துறை யாழ்ப்பாண பல்கலைக்கழகம்)

விஞ்ஞான வளர்ச்சியின் காரணமாக இன்றைய உலகு தொழில்நுட்ப மயமாகிவிட்டது. மூலை முடுக்கெங்கும் தொழில்நுட்பங்களின் ஆதிக்கமே அரியணை போட்டும் அரசாட்சி செய்து கொண்டிருக்கின்றது. அந்த அடிப்படையில் பல் இல்லா பாட்டி தாத்தா முதல் பால் குடிக்கும் குழந்தை முதல் இன்றைய காலங்களில் அன்றாடம் பயன்படுத்தும் தொழில்நுட்ப சாதனமாக அவர்களின் கரங்களில் அதிநவீன தொலைபேசிகள் தவழ்ந்து கொண்டிருக்கின்றது. நகமும் சதையும் போல இன்றைய மனித வாழ்வில் பிரிக்க முடியாத அங்கமாக தொலைபேசிகள் திகழ்கின்றன. இந்த தொலைபேசி பாவனையால் எந்த அளவுக்குப் பயன் உள்ளதோ அதே அளவுக்குத் தீமையும் உண்டு. தொலைபேசி பாவனைக்கு அடிமையாகிப் போனோர் பல மணி நேர கணக்கை அதனுடனே கழிக்கின்றனர். அளவுக்கு மீறினால் அமிர்தமும் நஞ்சு என்பது போல அதிகப்படியான தொலைபேசி பாவனையே மக்கள் மத்தியில் நோமோ ஃபோபியா (Nomophobia) என்ற மனநல வியாதியை ஏற்படுத்தியுள்ளது.

நோமோஃபோபியா பற்றி வைத்திய நிபுணர்கள் சொல்கையில் "No mobile phobia" என்பதன் சுருக்கமே நோமோ ஃபோபியா( Nomophobia) என்று அழைக்கப்படுவதாகவும், நமது மொபைல் போன் நம்மிடம் இல்லை என்றால் எங்களிடம் தோன்றும் ஒருவித அச்ச உணர்வுகளின் விளைவால் ஏற்படும், உடல் மற்றும் மனநலம் சார்ந்த கோளாறுகளே நோமோஃபோபியா என்று அழைக்கப்படுவதாகவும் கூறுகின்றார்கள். நோமோஃ போபியா பற்றிய மேலும் பல சுவாரசியமான மற்றும் தெளிவான தகவல்களை நுவரெலியா மாவட்டத்தில் பாடசாலைகள் ரீதியில் உளவியல் துறை வழிகாட்டியாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கும் ரவீனா ரவிச்சந்திரன் எங்களோடு பகிர்ந்து கொண்டார்.

அவையாவன நோமோஃபோபியா என்ற உளநல குறைபாடானது கடந்த பல வருடங்களாக பெரும்பாலான மக்களிடம் காணப்படுகின்றது.

குறிப்பாகத் தொலைப்பேசி இல்லாமல் ஒரு நிமிடம் கூட இருக்கவே முடியாது. அவ்வாறு இருக்கும் பட்சத்தில் இவ்வுலகில் இருந்து தாம் துண்டிக்கப்பட்டு, தனித்து கை விடப்பட்டவர்களாக அவர்கள், அவர்களையே எண்ணிக்கொள்வார்கள். காரணம் இன்றி பயப்பட்டுக் கொண்டு இருப்பார்கள். இதுவே நோமோஃபோபியாவின் தாக்க நிலையாகும். மக்கள் நவீன உலகுக்கு மாறுகிறோம் என்ற ஆர்வத்தில் அதற்கு அடிமையாகி விட்டார்கள் என்பதே உண்மை.

இதுவரைக்கும் தொலைபேசி பயனாளிகள் எண்ணிக்கைகளில் கையடக்க தொலைப்பேசியை பயன்பப்படுத்தும் 66 சதவீதமான மக்கள் இந்த குறைப்பாடுக்குள் அடிமையாகி உள்ளார்கள் என்று உலகில் செய்த ஆய்வுகள் கூறப்படுகின்றன. பீ.எம்.சி மன நல மருத்துவம் வெளியிட்ட ஆய்வின் படி மொபைல் போபியா உள்ளவர்கள் தொலைப்பேசி இல்லாமல் இருக்கும்போது அதிகம் கவலையடைகிறார்கள் என்று கூறுகின்றது. புதிதாக மேற்கொள்ளும் ஆய்வுகளில் நொமோஃபோபியாவினால் பாதிக்கப்பட்டோரின் சதவீதம் அதிகரித்துக் கொண்டே தான் செல்கின்றது. குறிப்பாக இன்றைய காலங்களில் நோமோஃபோபியா வினால் அதிகம் பாதிக்கப்படுபவர்கள் பதின்ம பருவத்தினராக உள்ளார்கள். மேலும், இவ்வியாதி பற்றிய அறிகுறிகளாக ரவீனா ரவிச்சந்திரன் கூறிய விடயங்களை இனி நோக்குவோம்.

நோமோஃபோபியாவினால் பாதிக்கப்பட்டோர் தூங்கிக் கொண்டு இருக்கும் போது தங்களின் கையடக்கத் தொலைபேசியை ஒருவர் பறித்துக் கொண்டு செல்வது போல அல்லது காணாமல் போவது போல, இல்லை என்றால் உயரமான இடங்களில் இருந்து தொலைபேசி விழுந்து உடைவது போலக் கனவு தோன்றி திடீரென நித்திரை விட்டு எழும்புவார்கள், சிலர் தூக்கத்தில் அலறுதல், இதனால் படுக்கையில் தன் கட்டுப்பாடு இன்றி சிறுநீர் கழித்தல் இப்படியான அறிகுறிகள் அவரிடம் தென்படும். மேலும் சிலர் ஒன்றுக்கு மேற்பட்ட கையடக்க தொலைபேசியை வைத்து இருப்பார்கள். காரணம் கேட்டால் ஒன்று தொலைந்து விட்டால் இன்னொன்று உபயோகம் படும் என்று கூறுவார்கள்.

குறிப்பாகத் தூங்கிக் கொண்டு இருக்கும் போது தொடர் நித்திரை இல்லாமல் இடையில் விழித்துக்கொண்டு தொலைபேசி சார்ஜ் போட்டு உள்ளோமா அல்லது அணைத்து விட்டோமா அல்லது யாராவது யாதாயினும் தகவல் அனுப்பி உள்ளார்களா என்று அவ்வப்போது பரிசோதிப்பார்கள். அவ்வாறே யாருடனும் அதிகம் தொடர்புகளை ஏற்படுத்தாமல் இருத்தல், ஏதோ கவலையில் இருத்தல், தொலைப்பேசியை எப்படி சரி சார்ஜ் பண்ண வேண்டும் என்றதற்காகப் பாதுகாப்பு இல்லாத இணைப்புகளைப் பயணப்படுத்தல், டேட்டா இணைப்பு முடிவடைந்து விட்டால் கடன் வாங்கி சரி தொலைபேசியை பயன்படுத்தல் இப்படியான பல அறிகுறிகள் மோமோ ஃபோபியாவினால் பாதிக்கப்பட்டவர்களிடம் தென்படும்.

நோமோஃபோபியாவினால் ஏற்படக்கூடிய பாதிப்புகள் பற்றி உளவள துறை வழிகாட்டி ரவீனா ரவிச்சந்திரன் கூறுகையில்,

தொலைபேசியினை அதிகமாகப் பயன்படுத்துவதனால் கண் அதிகம் எறியுதல், கண் வறண்டு போதல், சரியான நித்திரை இல்லாமையினால் கண் கரு வளையங்கள் தோன்றல், உடல் சோர்வு, கழுத்து மற்றும் விரல்களில் வலி ஏற்படல் போன்ற பாதிப்புகள் தோன்றும் மேலும் இதய படபடப்பு, உயர் இரத்த அழுத்தம், உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தும் திறன் குறையும். குறிப்பாக பலர் நித்திரையின்போது தலையணை அடியில் தொலைபேசியை வைத்துக்கொண்டு தூங்குவார்கள்.

உலக சுகாதார நிறுவன ஆயிவில் கூட கூறப்பட்ட விடயம் என்ன என்றால் படுக்கையில் அல்லது படுக்கை தலையணைக்கடியில் தொலைபேசியை வைத்துக்கொண்டு தூங்கும் பெண்களுக்கு அதிகம் கரு சிதைவு ஏற்படுகிறது என்பதாகும்.

இந்த நோமோ ஃபோபியா தாக்கத்திலிருந்து எங்களை பாதுகாத்துக் கொள்வதற்கு நாங்கள் செய்ய வேண்டிய நடவடிக்கைகள் என்வென்றால், முதலில் நாம் தொலைபேசி போபியாவுக்கு அடிமையாகி உள்ளோம் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். இதில் இருந்து எம்மால் வெளியில் வர முடியும் என்று நம்பிக்கை கொண்டு அதற்கு வழி முறைகளையும் தேட வேண்டும். ஓய்வில் உள்ள நேரங்களில் தொலைபேசியை முடிந்த வரையில் நிறுத்தி வைக்கவேண்டும்.ஒரு நாளைக்கு ஒரு மணி நேரம் வரை தொலைபேசியை அணைத்து (off ) வைப்பது சிறந்ததாகும்.

ஒவ்வொரு நாளும் தொலைபேசி பயன்படுத்தும் நேரத்தின் அளவை மெதுவாக சுருக்கி கொண்டே வர வேண்டும். ஓய்வு நேரங்களில் வெளி விளையாட்டுகளில் ஈடு படலாம். பூங்கா மற்றும் நடை பயிற்சிக்கு செல்லுதல் உடல் ஆரோக்கியத்தையும் தரும். முடிந்த வரை இலத்திரனியல் புத்தகங்களை வாசிப்பதை விட்டு, அச்சு புத்தகங்களை தேடி வாசிக்கலாம். வானொலி மற்றும் நல்ல இசை கேட்கலாம், புதிய ஆக்கங்களை சுயமாக உருவாக்க சிந்தனைகளை திசை திருப்பலாம், இதன்போது தொலைபேசி நினைவுக்கு வராது அல்லவா. நோமோ ஃபோபியாவின் காரணமாக சுவாசத்தில் சிக்கல் மற்றும் இதயத்துடிப்பில் மாற்றம் ஏற்படும். ஆகையினால் இதனை குறைக்க சுவாசம் பயிற்சி, தியானம் மற்றும் யோகா பயிற்சிகளில் கட்டாயம் ஈடு பட வேண்டும். இது மிகப்பெரிய தீர்வாகும்.

இவற்றோடு மிகவும் தீவிரமான அறிகுறிகள் இருந்தால் கட்டாயமாக மிகவும் பொருத்தமான உள நல மருத்துவரை அணுகுதல் அவசியமாகும். மேற்கூறப்பட்ட விடயங்களில் இருந்து உங்களுக்கு தெரிந்திருக்கும் நீங்களும் நோமோஃபோபியா வளையில் சிக்கி தவிப்பவரா? இல்லையா என்று. எப்போது யதார்த்த உலகை விட்டு, தொழில்நுட்ப உலகினில் பிரவேசிக்க தொடங்கினோமோ அன்றிலிருந்து அறியாத புதுப்புது குறைபாடுகள் தோன்ற தொடங்கின. அந்த விளைவுகளில் ஒன்று தான் நோமோஃபோபியா. எனவே இந்த நோமோஃ போபியா பற்றிய விழிப்புணர்வு எங்களிடம் இருப்பது அவசியமாகும்.




# நேர நிர்வாகமே வெற்றிக்கான உத்தி



முருகையா தவக்குமார்
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்
இரண்டாம் வருடம்

நேரம் என்பது ஒரு வரையறுக்கப்பட்ட மற்றும் விலைமதிப்பற்ற வளமாகும், அதை நாம் எவ்வாறு நிர்வகிப்பது என்பது நமது தனிப்பட்ட மற்றும் தொழில் வாழ்க்கையை கணிசமாக பாதிக்கும். பயனுள்ள நேர மேலாண்மை என்பது உற்பத்தித்திறன், குறைவான மன அழுத்தம் மற்றும் சிறந்த வேலையுடன் இணைந்த வாழ்க்கை சமநிலைக்கு முக்கியமாகும். இந்த நேர நிர்வாகம், அதன் முக்கியத்துவம், தனிநபர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் நேரத்தைத் திறமையாக நிர்வகிக்கும் கலையில் தேர்ச்சி பெறுவதற்கான உத்திகள் என்பன எல்லோரும் அறிந்து கொள்ள வேண்டியவையாகும்.

இந்த நேர நிர்வாகம் என்பது, கிடைக்கும் அரிய நேரத்தைப் பயன்படுத்திக் கொள்வதற்காக, பணிகள் மற்றும் செயல்பாடுகளைத் திட்டமிடுதல், ஒழுங்கமைத்தல் மற்றும் முன்னுரிமைப்படுத்துதல் ஆகும். இத்தகைய நேர மேலாண்மை தனிநபர்கள் தங்களுக்குக் கிடைக்கும் நேரத்தைச் சிறப்பாகப் பயன்படுத்தவும், உற்பத்தித்திறனை அதிகரிக்கவும் மற்றும் குறைந்த நேரத்தில் அதிகமாகச் சாதிக்கவும் அனுமதிக்கிறது. சரியான நேர மேலாண்மையின்படி தனிநபர்கள் தங்கள் தனிப்பட்ட வாழ்க்கையை நிர்வகிக்கும் பொழுது, பொழுதுபோக்குகள் மற்றும் ஓய்வெடுத்தல் என்பவற்றுக்கு நேரம் இருப்பதை உறுதிசெய்யக் கூடியதாகவிருக்கும். மேலும் இது தேவையற்ற பதற்றத்தைத் தடுக்கிறது மற்றும் ஒட்டுமொத்த நல்வாழ்வை மேம்படுத்துகிறது.

எண்ணியதை எண்ணியவாறே பெறுவதற்குரிய வாய்ப்பினை நேர நிர்வாகம் தந்தாலும் அதற்கும் பொதுவான சவால்கள் உள்ளன. தள்ளிப்போடுதல் மற்றும் பணிகளைத் தாமதப்படுத்துவதால் வேலையில் தொய்வு ஏற்படுகிறது. அடிக்கடி ஏற்படும் கவனச் சிதறல்கள் மற்றும் பல்பணி ஆகியவை உற்பத்தித்திறனைக் குறைத்து, குறித்த பணி முழுமை பெறுவதனைத் தடுக்கிறது. மேலும், மோசமான திட்டமிடலின் அடிப்படையில் ஒழுங்கில்லாமல் செயலாற்றும் பொழுது அது குறிக்கோளற்ற தன்மைக்கு வழிவகுக்கிறது, இதனால் முக்கியமற்ற பணிகளில் நேரத்தை வீணடித்தல், முக்கியமான மற்றும் அவசரமான பணிகளை வேறுபடுத்திப் பார்க்கத் தவறுதல் என்பன ஏற்படுகின்றன.

ஆனால், மறுபுறம் இத்தகையதோர் நிலையை வெற்றி கொள்வதற்கான பயனுள்ள நேர நிர்வாக உத்திகளும் காணப்படுகின்றன. அவற்றில் முதலாவது இலக்கினைத் நிர்ணயம் செய்து கொள்ளல் வேண்டும். அவை புத்திசாலித்தனமான இலக்குகளாக அமைய வேண்டும். இதற்காக குறிப்பிட்ட, அளவிடக்கூடிய, அடையக்கூடிய, மற்றும் ஒன்றோடு ஒன்று தொடர்புடைய இலக்குகளைக் கண்டுகொள்ள வேண்டும். இத்தகைய தெளிவான குறிக்கோள்கள் வினைத்திறனான சிந்தனைகளைத் தோற்றுவிக்கின்றன.

அடுத்து இலக்குகளை ஆராய்ந்து முன்னுரிமைப் படுத்த வேண்டும். 'அவசரம் மற்றும் முக்கியத்துவத்தின் அடிப்படையில் பணிகளை நன்கு வகைப்படுத்தவும், அதற்கேற்ப முன்னுரிமை அளிக்கவும்' என்று ஐசன்ஹோவர் மேட்ரிக்ஸ் கூறியுள்ளார். மேலும் பிரையன் டிரேசி என்ற ஆங்கில எழுத்தாளரும் காலை எழுந்தவுடன் தவளை என்ற தனது புத்தகத்தில் 'நீங்கள் கடினமானது என்று எண்ணும் மிகப் பெரிய வேலையைத் தான் முதலில் முடிக்க வேண்டும்' என்று குறிப்பிட்டுள்ளார்.

இதற்காக டிரேசி ஏபிசிடிஇ முறையினைப் பரிந்துரை செய்கிறார். பணிகளுக்கு முன்னுரிமை நிலைகளை வழங்குதலே இதுவாகும். (அதிக முக்கியமானவற்றிற்கு ஏ, குறைந்த முக்கியத்திற்கு ஈ), இந்த வழிமுறை முக்கியமானவற்றில் கவனம் செலுத்த உதவுகிறது.

இதற்குத் துணை புரியும் நேர நிர்வாகக் கருவிகளைப் பயன்படுத்த வேண்டும். பணிகள் மற்றும் சந்திப்புகளைத் திட்டமிட டிஜிட்டல் வழிகள், காலெண்டர்கள் அல்லது நேரடியாக நினைவூட்டும் ஒருவரின் உதவியைப் பெறுவதனூடாக நேரக் கண்காணிப்பில் ஈடுபட முடியும். நேரத்தை வீணடிக்கும் வடிவங்கள் மற்றும் பகுதிகளை அடையாளம் காண ஒரு வாரத்தில் நிகழ்த்திய வேலை அட்டவணையை வாய்ப்புப் பார்த்தல் வேண்டும். இது ஒரு பழக்கமாக மாறும் போது உற்பத்தித் திறனை அதிகரிப்பதோடு, போதுமான நேரத்தினை ஒதுக்குவதற்கும் அது துணைபுரியும்.

நேர நிர்வாகத்துடன் கூடிய உற்பத்தித் திறனை அதிகரிக்கப் பலர் பொமோடோரோ முறையைப் பரிந்துரைக்கின்றனர். குறித்த நேர இடைவெளியில் வினைத்திறனாகப் பணிபுரிவதற்கான ஒரு தொழில்நுட்பமாக இந்த பொமோடோரா காணப்படுகிறது. இது வேலையை 25 நிமிடங்கள் அடங்கிய இடைவெளிகளாக (போமோடோரோஸ்) பிரிக்கிறது 25 நிமிட ஆழமான பணியினைத் தொடர்ந்து ஒரு சிறிய இடைவெளி எடுத்துக் கொள்ள வேண்டும். இத்தகைய நான்கு இடைவெளிகளுக்குப் பிறகு, ஒரு நீண்ட இடைவெளி எடுக்கவும் முடியும்.

அடுத்து கவனச் சிதறல் மீது கவனம் செலுத்துவது அவசியம். கவனச்சிதறல்களை நீக்குதலுக்காக கவனச்சிதறல் இல்லாத சூழலை உருவாக்குதல் இங்கு மிக மிக அவசியமானது. கால் நியூ போர்ட் என்ற எழுத்தாளர் 'டீப் வேர்க்' எனும் தனது ஆராய்ச்சி நூலில் ஆழமாக வேலை செய்தலின் அவசியத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

இதனை அவர் கண்ணும் கருத்துமாக வேலை செய்தல் என்கிறார். கவனச்சிதறல் இன்றி வேலை செய்தல் அரிதானது மற்றும் மதிப்புமிக்கது மேலும் செயற்கை நுண்ணறிவைச் சார்ந்து இயங்கும். இந்த நவீன உலகத்துடன் போட்டிப் போடுவதற்குரிய தகைமையைத் தருவதுமாகும் என்று அந்த நூலில் அவர் கர்ச்சிக்கிறார்.

கவனச்சிதறலில் இருந்து தப்பித்துக்கொள்ளத் தொலைத் தொடர்புச் சாதனங்களின் அறிவிப்புகளை முடக்குதல் வேண்டும். தேவையற்ற தாவல்களில் விழிப்புணர்வு வேண்டும். மற்றும் பணியிடத்தை ஒழுங்கமைப்பது போன்றவற்றின் குறுக்கீடுகளையும் குறைக்க வேண்டும். நாம் காலையில் முதல் வேலையாக மின்னஞ்சலைப் படிக்கும்போது அல்லது ஸ்மார்ட் போனில் ஏதோ செய்தி வந்திருப்பதை அறிவிக்கின்ற ஒலிச் சத்தத்திற்கு செயல் விடை அளிக்கும் போது, 'டோப் மீன்' என்ற இரு வேதிப்பொருளை மூளை சிறிதளவு விடுவிக்கிறது. அது மனித உடலுக்கு இன்பத்தைக் கொடுக்கிறது. மேலும் அது மூளையின் ஆர்வத்தைத் தூண்டி அத்தகைய மின்னஞ்சல்களுக்கும், குறுஞ்செய்திகளும் உடனடியாக எதிர்வினையாற்றவும் செயல் விடையளிக்கவும் தூண்டுகிறது. இவ்வாறு மின்னஞ்சல்களாலும் குறுஞ்செய்திகளாலும் தூண்டப்பட்டு மூளை விடுவிக்கின்ற டோபமீனைக் கொண்டு ஒவ்வொருவரும் நாளைத் துவங்கும்போது, அன்றைய எஞ்சிய நாள் முழுவதும் எங்கள் முக்கியமான வேலைகள் மீது கவனம் செலுத்துவது மிகக் கடினமானதாக ஆகிவிடுகிறது.

குறிப்பாக இல்லை, முடியாது என்று சொல்லவும் கற்றுக்கொள்ளுதல் வேண்டும். திறம்பட நிர்வகிக்க முடியாத பணிகளையும் பொறுப்புக்களையும் இனங்கண்டு அதற்குப் பதிலாக இத்தகைய வார்த்தைகளைச் சொல்ல வேண்டும். இல்லையென்றால், பிறரிடம் ஒப்படைக்கக்கூடிய பணிகளை அடையாளம் கண்டு பொருத்தமானவரிடம் கையளிக்கலாம். குறிப்பாகத் தேவைகள் மற்றும் சூழ்நிலைகள் மாறும்போது, அதற்கேற்ப நேர நிர்வாக உத்திகளை மாற்றியமைக்கும் திறனோடு இருத்தல் வேண்டும்.

இத்தகைய நேர நிர்வாகத்தின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்வது, பொதுவான சவால்களை அங்கீகரிப்பது மற்றும் பயனுள்ள உத்திகளைப் பயன்படுத்துவதன் மூலம், தனிநபர்கள் நேரத்தைத் திறமையாக நிர்வகிக்கும் கலையில் தேர்ச்சி பெற முடியும். குறிப்பாகக் கல்வியில் சிறந்து விளங்குவதை இலக்காகக் கொண்ட மாணவராக இருந்தாலும், தொழில் முன்னேற்றத்திற்காகப் பாடுபடும் பணியாளராக இருந்தாலும் அல்லது வெற்றிகரமான வணிகத்தை உருவாக்க விரும்பும் தொழிலதிபராக இருந்தாலும், நேர மேலாண்மையின் கொள்கைகள் ஒவ்வொருவருக்கும் விலைமதிப்பற்ற வளத்தை அதிகம் பயன்படுத்த அதிகாரம் அளிக்கும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

புது டெல்லி

ஒரே பாலின திருமணத்துக்கு

# சட்ட அங்கீகாரம் இல்லை

தன் பாலின திருமணத்துக்கு சட்ட அங்கீகாரம் இல்லை என இந்திய உச்சநீதிமன்ற அரசியல் சாசன அமர்வு தீர்ப்பு வழங்கியுள்ளது. சட்ட அங்கீகாரம் வழங்குவது குறித்து பாராளுமன்றம் தான் முடிவு செய்ய வேண்டும் என நீதிபதிகள், செவ்வாய்க்கிழமை (17) தீர்ப்பு வழங்கியுள்ளனர்.




தலைமை நீதிபதி சந்திரசூட் தலைமையிலான 5 நீதிபதிகளை கொண்ட அரசியல் சாசன அமர்வு தீர்ப்பு வழங்கியுள்ளது. ஐந்தில் மூன்று நீதிபதிகள் தன்பாலின திருமணத்துக்கு சட்ட அங்கீகாரம் இல்லை என தீர்ப்பு வழங்கியுள்ளனர்.

தன்பாலின திருமணங்களை அங்கீகரிப்பது தொடர்பாக உயர் அதிகாரம் கொண்ட குழு அமைக்க ஒன்றிய அரசுக்கு ஆணையிட்டுள்ளது. சிறப்பு திருமண சட்டத்தை ரத்து செய்யவும் உச்சநீதிமன்ற அரசியல் சாசன அமர்வு மறுப்பு தெரிவித்துள்ளது.

தன் பாலின திருமணத்தை அங்கீகரிக்காததால் சிறப்பு திருமணம் மற்றும் வெளிநாட்டு சட்டங்களை இரத்து செய்ய முடியாது என உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது.

# "2040க்குள் நிலவுக்கு மனிதனை அனுப்ப வேண்டும்"



ககன்யான் திட்டத்தின் முன்னேற்றம், விண்வெளி ஆய்வு முயற்சிகளின் எதிர்காலம் குறித்து பிரதமர் மோடி தலைமையில் உயர்மட்ட ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றுள்ளது. அப்போது, 2040க்குள் நிலவுக்கு இந்தியாவின் சார்பில் மனிதனை அனுப்ப வேண்டும் என்று விஞ்ஞானிகளுக்கு பிரதமர் மோடி அறிவுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து பிரதமர் மோடி மேலும்,

2035க்குள் இந்திய விண்வெளி ஆய்வு மையத்தை உருவாக்க வேண்டும். 2040க்குள் நிலவுக்கு இந்தியாவின் சார்பில் மனிதனை அனுப்ப வேண்டும். வெள்ளி கிரகத்தின் ஆர்பிட்டர் மிஷன், செவ்வாய் லேண்டரை ஆகிய கோள்களுக்கு இடையேயான பயணங்களில் பணியாற்ற வேண்டும் எனவும் கூறியுள்ளார்.

கொல்கத்தா



# சீட் அட்டைகள் மூலம் சிறுவன் உலக சாதனை

கொல்கத்தாவை சேர்ந்த சிறுவன் ஒருவன் சீட் அட்டைகள் மூலம் உலக சாதனை படைத்துள்ளார்.

கொல்கத்தாவை சேர்ந்த அர்னவ் தாகா (15) என்ற சிறுவன் தன்னுடைய 8 வயதிலிருந்து ஏதாவது சாதிக்க வேண்டும் என்ற ஆர்வமுடன் இருந்துள்ளார்.

அதன்படி, அட்டை பெட்டிகள் மற்றும் சீட்டு அட்டைகளை வைத்து புதுவிதமாக வடிவமைப்புகளை உருவாக்கி விளையாடுவது வழக்கம்.

இந்நிலையில், கொரோனா காலக்கட்டத்தில் வீட்டில் இருந்த நேரத்தில், ஏதாவது வித்தியாசமாக செய்ய வேண்டும் என முயற்சித்துள்ளார்.

அப்போது சீட்டு விளையாடும் 1,43,000 அட்டைகளை வைத்து பெரிய வடிவமைப்பில் கட்டிடங்களை கட்டுவதற்கு முயற்சி எடுத்துள்ளார். இதற்கு உடனே வெற்றி கிடைக்க வில்லை. பலமுறை முயற்சி செய்துள்ளார்.

இவ்வாறு விட முயற்சி செய்து அவர் கொல்கத்தா நகரத்தின் நான்கு மக்காவோ ஹோட்டல்களின் தோற்றத்தினை உருவாக்கி உலக சாதனைப் படைத்துள்ளார். சுமார் 40 அடி நீளம், 11 அடி 4 அங்குல உயரம் மற்றும் 16 அடி 8 அங்குல அகலம் அளவு கொண்டதாக வடிவமைப்பதற்கு இவர் 41 நாள்களை செலவிட்டுள்ளார்.

புதுச்சேரி

# இரு நிறங்களாக மாறிய கடல் நீர்

புதுச்சேரியில் கடல் நீர் ஒரே நேரத்தில் இரண்டு விதமான நிறங்களில் மாறி காட்சியளிக்கிறது.

காந்தி சிலையில் இருந்து தலைமை செயலகம் வரையிலான கடற்பகுதி செந்நிறமாக மாறியுள்ளது.


இரசாயன கழிவுகள் கலந்திருக்கலாம் என அதிகாரிகள் சந்தேகிக்கின்றனர். கடலுக்கு அடியில் ஏற்பட்ட அரிப்பு காரணமாக இதுபோன்று நிகழலாம் என ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

அவுஸ்திரேலியா

# 'எக்ஸ்' க்கு ரூ.3 கோடி அபராதம்

அவுஸ்திரேலியாவில் தீங்கு விளைவிக்கும் மற்றும் சட்ட விரோத பதிவுகளை சமூகவலைதளமான எக்ஸ் (டுவிட்டர்) சரியாக கையாளவில்லை என அதன் மீது தொடர்ச்சியாக குற்றம் சாட்டப்பட்டது. குறிப்பாக பாலியல் சுரண்டல் மற்றும் குழந்தைகள் மீதான பாலியல் தாக்குதல் தொடர்பான பதிவுகளை எவ்வாறு கையாண்டது என எக்ஸ் நிறுவனம் முழுமையாக விளக்கம் அளிக்கவில்லை.

இதனால் எக்ஸ் நிறுவனத்துக்கு சுமார் 3 கோடியே 20 இலட்சம் ரூபாய் அபராதம் விதித்து அந் நாட்டின் இணைய பாதுகாப்பு கண்காணிப்பு நிறுவனம் உத்தரவிட்டுள்ளது. இதனை எதிர்த்து அவுஸ்திரேலியாவின் உச்சநீதிமன்றத்தில் எக்ஸ் நிறுவனம் மேன்முறையீடு செய்யும் என தெரிவித்துள்ளது.



இஸ்ரேல்

# "ஒளிக்கும், இருளுக்கும் இடையிலான யுத்தம்"

ஹமாசுக்கு எதிராக நடைபெற்று வரும் போர், மனிதகுலத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் "ஒளியின் சக்திகளுக்கும்" , விலங்குகளை உள்ளடக்கிய "இருளின் சக்திகளுக்கும்" இடையேயான யுத்தம் என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக மேலும் அவர் கூறுகையில், "75 ஆண்டுகள் கடந்தும் கூட, சுதந்திரப் போர் முடிவடையவில்லை. ஹமாஸுக்கு எதிராக வெற்றி பெறுவதே முக்கிய நோக்கம்" என்று குறிப்பிட்டுள்ளார்.




அமெரிக்கா

# இஸ்ரேல் செல்கிறார் ஜோ பைடன்

இஸ்ரேல்-பலஸ்தீனம் இடையே போர் தொடர்ந்து வருகிறது. இஸ்ரேல் மீது கடந்த ஒக்டோபர் 6ஆம் திகதி முதல் பலஸ்தீன ஆதரவு நிலைப்பாடு கொண்ட ஹாமாஸ் அமைப்பினர் தாக்குதல் நடத்தினர். இவர்களின் தாக்குதலுக்கு இஸ்ரேல் பதில் தாக்குதல் நடத்தி வருகிறது.

இந் நிலையில், அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் இஸ்ரேலுக்கு தொடர்ந்து ஆதரவு தெரிவித்து வரும் நிலையில், "காஸாவை இஸ்ரேல் இராணுவம் ஆக்கிரமிப்பது மிகப்பெரிய தவறாக அமையும். காஸாவில் இருந்து ஹமாஸ் படையினர் வெளியேற்றப்பட வேண்டும். ஆனால், அதனை ஆக்கிரமிக்கக்கூடாது" என தெரிவித்திருந்தார்.



இந்த நிலையில், அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் புதன்கிழமை (18) இஸ்ரேல் செல்ல உள்ளார்.

இதுகுறித்து அவர் தனது ட்விட்டர் பக்கத்தில், "ஹமாஸின் கொடூரமான பயங்கரவாதத் தாக்குதலை எதிர்கொண்டு ஒற்றுமை வலியுறுத்த புதன்கிழமை (18) நான் இஸ்ரேலுக்குச் செல்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

உலகக் கிண்ணம்:

# இலங்கையை வென்ற அவுஸ்திரேலியா

இந்தியாவில் நடைபெற்று வரும் சர்வதேச கிரிக்கெட் சபையின் உலகக் கிண்ணத் தொடரில், லக்னோவில் ஞாயிற்றுக்கிழமை (15) நடைபெற்ற இலங்கை உடனான போட்டியில் அவுஸ்திரேலியா வென்றது.



ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இலங்கை

இலங்கை: 209/10 (43.3 ஓவ. ) (துடுப்பாட்டம்: குசல் பெரேரா 78 (82), பதும் நிஸங்க 61 (67), சரித் அஸலங்க 25 (39) ஓட்டங்கள். பந்துவீச்சு: அடம் ஸாம்பா 4/47, பற் கமின்ஸ் 2/32, மிற்செல் ஸ்டார்க் 2/43, கிளென் மக்ஸ்வெல் 1/36)

அவுஸ்திரேலியா: 215/5 (35.2 ஓவ.) (துடுப்பாட்டம்: ஜொஷ் இங்லிஸ் 58 (59), மிற்செல் மார்ஷ் 52 (51), மர்னுஸ் லபுஷைன் 40 (60), கிளென் மக்ஸ்வெல் ஆ.இ 31 (21), மார்க்கஸ் ஸ்டொய்னிஸ் ஆ.இ 20 (10) ஓட்டங்கள். பந்துவீச்சு: டில்ஷான் மதுஷங்க 3/38, டுனித் வெல்லலாகே 1/53)

போட்டியின் நாயகன்: அடம் ஸாம்பா

இந்நிலையில், சென்னையில் இன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் நியூசிலாந்தும், ஆப்கானிஸ்தானும் மோதவுள்ளன.



# ஸகிரியன் லெஜன்ட் பிறீமியர் லீக்

■ ஏ.எல்.எம். ஷினாஸ்

சாஹிராக் கல்லூரியில் கல்வி கற்ற 46 வயதுக்கு மேற்பட்ட பழைய மாணவர்களால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள ஸகிரியன் லெஜன்ட் பிறீமியர் லீக் கிரிக்கட் தொடரானது இம்மாதம் 28, 29ஆம் திகதி ஆகிய தினங்களில் ஆரம்பமாகவுள்ளது.

இத்தொடரில் லெஜன்ட் 90, லெஜன்ட் 91, லெஜன்ட் 92, லெஜன்ட் 93, லெஜன்ட் 95 மற்றும் லெஜன்ட் 96 உட்பட மொத்தம் ஆறு அணிகள் பங்குபற்றுகின்றன.

இத்தொடரானது இரண்டு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு ஏ குழுவில்
லெஜண்ட் 90, லெஜண்ட் 91, லெஜண்ட் 92 பி குழுவில் லெஜண்ட் 93, லெஜண்ட் 95, லெஜண்ட் 96
ஆகிய அணிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

அணிக்கு 10 ஓவர்கள் கொண்ட குழுப்போட்டிகளாகவும், அரையிறுதி மற்றும் இறுதிப் போட்டிகள் 12 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களாகவும் நடத்தப்படும்.

விஷேடமாக இச்தொடரில் இரு ஓவர்களை பவர் பிளயர் ஆட்டமாக பிரகடனப்படுத்தப்படவுள்ளதோடு, வெற்றி பெறும் அணிகளுக்கு இரண்டு புள்ளிகளும் ஆட்டம் சமநிலையில் முடிவுறும் போது தலா சுப்பர் ஓவர் வீசப்பட்டு வெற்றி தோல்வி தீர்மானிக்கப்படும்.

பின்வரும் அட்டவனை முறையே போட்டிகள் நடைபெறும்.

2023.10.28
லெஜன்ட் 90 எதிர் லெஜன்ட் 91 அணியினரும்,
லெஜன்ட் 92 எதிர் லெஜன்ட் 93 அணியினரும்,
லெஜன்ட் 95 எதிர் லெஜன்ட் 96 அணியினரும் மோதவுள்ளனர்.

2023.10.29
அரையிறுதிப் போட்டிகள், இறுதிப் போட்டி நடைபெறவுள்ளது.



# குணதிலக மீதான தடை நீக்கம்

இலங்கை கிரிக்கெட் வீரர் தனுஷ்க குணதிலக்கவுக்கு விதிக்கப்பட்ட தடை நீக்கப்பட்டதாக இலங்கை கிரிக்கெட்டின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அவுஸ்திரேலியாவில் கடந்த வருடம் நடைபெற்ற இருபதுக்கு 20 உலகக் கிண்ணத்தின் போது பெண் ஒருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டின் பேரில் தனுஷ்காவிற்கு இலங்கை கிரிக்கெட் இந்த தடையை விதித்தது, மேலும் அந்த குற்றச்சாட்டில் இருந்து தனுஷை அவுஸ்திரேலிய நீதிமன்றம் அண்மையில் விடுவித்தது.



அமரர் சிவகுருநாதன் ஞாபகார்த்த கரப்பந்தாட்ட கிண்ணத் தொடர்:

# சம்பியனான ஆவரங்கால் இந்து இளைஞர்

■ அஸ்ஹர் இப்றாஹீம்

அமரர் சிவகுருநாதன் ஞாபகார்த்தமாக ஆண்டுதோறும் இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கம் நடத்தி வரும் கரப்பந்தாட்டத் தொடரில் ஆவரங்கால் இந்து இளைஞர் சம்பியனானது.

இளவாலை வாலிபத்திடலில் அண்மையில் மின்னொளியில் நடைபெற்ற இத்தொடரின் இறுதிப் போட்டியில் 25-23, 25-16, 25-19 என்ற நேர் செட்களில் புத்தூர் சென்றல் ஸ்டாரை வென்று இந்து இளைஞர் சம்பியனானது.



# ஓகக்கலை அமைப்பின் மாணவர்கள் சாதனை

■ அ. அச்சுதன்

உலக ஒருங்கிணைந்த சிலம்ப சம்மேளனத்தின் இரண்டாவது தெற்காசிய சிலம்பம் கிண்ணப் போட்டிகளில் திருகோணமலை ஓகக்கலை அமைப்பின் மூன்று மாணவர் பங்குபற்றி வெள்ளிப் பதக்கங்கள் இரண்டு, வெண்கலப் பதக்கங்கள் மூன்றை வென்றுள்ளனர்.

சிலம்பம் பயிற்றுவிப்பு ஆசிரியர் கிஷோர் குமாரின் குறுகிய கால பயிற்றுவிப்பின் மூலம் மாணவர் இலக்கை அடைய பெற்றுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்டினால் புதன்கிழமை 18 ஒக்டோபர் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.